# கும்பகோணமும் மகாமகப் பெருவிழாவும்

ஆசிரியர்கள் :

நடன. காசிநாதன்

மா. சந்திரமூர்த்தி

பொ. இராசேந்திரன்

தமிழ்நாடு அரசு

தொல்பொருள் ஆய்வுத்துறை வெளியீடு

1992

தொல்பொருள் ஆய்வுத்துறை வெளியீடு எண் 110

முதற் பதிப்பு-1992 (1000 பிரதிகள்)

TAMIL NADU STATE DEPARTMENT OF ARCHAEOLOGY * MADRAS
LIBRARY

© தொல்பொருள் ஆய்வுத்துறை

கும்பகோணமும் மகாமகப் பெருவிழாவும்

ஆசிரியர்கள்:

நடன. காசிநாதன்
மா. சந்திரமூர்த்தி
பொ. இராசேந்திரன்

விலை: ரூ. 8

தமிழ்நாடு அரசு

தொல்பொருள் ஆய்வுத்துறை அச்சகத்தில்

அச்சிடப்பட்டது.

# பதிப்புரை

அகவாழ்வையும் புறவாழ்வையும் தம் இரு கண்களாகக் கொண்டு வாழ்ந்த தமிழ் மாந்தர் ஓய்வு கிட்டுகையில் விழாக்களை நடத்தி மகிழ்ச்சியில் திளைத்திருக்கிறார்கள். அத்தகைய திருவிழாக்கள் தமிழ்நாட்டில் திங்கள் தோறும் நடைபெற்றிருக்கின்றன. அதிலும் குறிப்பாக ஒவ்வொரு திங்களிலும் முழுமதி திகழும் நாளில் விழாக்கள் நடத்துவதை அவர்கள் பெரிதும் விரும்பியிருக்கிறார்கள்.

அத்தகைய ஒரு விழாவே ஆண்டு தோறும் மாசித் திங்களில் மக நட்சத்திரனன்று நடைபெறும் மகத் திருவிழா. பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை குரு சிம்மராசியில் இருக்கும் காலத்தில் வரும் மாசி முழுமதி நாளே மகாமகம். இம்மகத் திருவிழா மிகப் பழங்காலந்தொட்டே தமிழகத்தில் கொண்டாடப் பெற்றிருக்கிறது. மணலி என்னும் சிம்ம விஷ்ணுச் சதுர்வேதி மங்கலத்துச் சபையார், சிறுமெப்பேடு என்னும் மும்முடிச் சோழ நல்லூரைச் சேர்ந்த ஒருவரிடம் நெல்லை அளித்து மாசி மகவிழாக் கொண்டாட ஏற்பாடு செய்துள்ளதை முதலாம் இராசேந்திரன் கல்வெட்டுத் தெரிவிக்கிறது. இதிலிருந்து கி.பி. 11-ஆம் நூற்றாண்டிலிருந்தே இவ்விழாக் கொண்டாடப்பட்டதை அறிகிறோம். இத்திரு நாளில் கும்பகோணத்திலுள்ள மகாமகக் குளத்தில் நீராடினால் நவ தீர்த்தங்களான கங்கை, யமுனை, சரசுவதி, கோதாவரி, நர்மதை, காவேரி, துங்கபத்ரா, கிருஷ்ணா, சரயூ ஆகிய தீர்த்தங்களில் நீராடியதற்கு ஈடானது என்று கருதப்படுகிறது.

தலம், மூர்த்தி, தீர்த்தம் என்ற மூன்றில் தீர்த்தத்துக்கு முக்கியத்துவம் அளிக்கப்பெறும் திருவிழாவாகும் இவ்விழா. தமிழ்நாட்டில் தீர்த்தத்துக்கென்று எடுக்கப்படும் பெருவிழா இது வொன்றேயாகும். ஆதலால் இவ்விழா பெரும் முக்கியத்துவம் பெறுகிறது. வடநாட்டில் கங்கை, யமுனை, சரசுவதி ஆகிய மூன்று ஆறுகள் கூடும் அலாகாபாத்தில் கும்பமேளா என்ற பெயரில் பெரு விழா எடுக்கப் பெறுகிறது.

அதே போன்று இந்தியாவில் காணப்பெறும் முக்கிய ஆறுகளான ஒன்பது ஆறுகளின் தீர்த்தங்களும் இம் மகாமகக் குளத்தில் நீர்

ஊற்றாகச் சுரக்கின்றன என்ற எண்ணத்தில் இக்குளத்தில் நீராடுவதைப் பெரும் பேறாக மக்கள் கருதுகின்றனர்.

அப்பெரு நாளில் பிறருக்குத் தானம் அளிப்பதையும் தம் வாழ்நாளின் முக்கிய கடமையாகக் கொண்டு வாழ்ந்திருக்கின்றனர். பண்டையோர் செய்த பல்வகைத் தானங்களைச் சித்தரிக்கும் சிற்பக் காட்சிகளைக் கொண்டிலங்கும் முன் மண்டபங்களைக் கொண்டு சைவச் சிற்றாலயங்கள் பதினாறு இம்மகாமகக் குளத்தைச் சுற்றி அமைந்திருப்பதும் ஒரு அரிய காட்சி.

அத்தகைய சிறப்புப் பொருந்திய இம்மகாமகப் பெரு விழா தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களின் ஆணைக்கிணங்க பெரும் பொருட் செலவில் கோலாகலமாகப் பிப்ரவரித் திங்கள் 18-ஆம் நாள் நடத்தப்படுகிறது. அவ்விழாவின் சிறப்பைச் சித்திரிக்கும் சிறு நூலாகிய இதனைத், தமிழ்வளர்ச்சிப் பண்பாட்டுத் துறைச் செயலாளர் டாக்டர் அவ்வை நடராசன் அவர்களின் நல்லரவணைப்போடு தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை வெளியிடுவதில் உள மகிழ்வெய்துகிறது.

இச்சிறுநூலை ஒரு வாரக் காலத்துக்குள் வெளிக்கொணர உதவிய இத்துறையின் அச்சுப்பிரிவு அலுவலர்கள் அனைவருக்கும், இந்நூல் அச்சிடுகையில் பிழைத்திருத்தம் செய்து உதவிய திருமதி. மார்க்சிய காந்தி உதவிக் கண்காணிப்பு கல்வெட்டாய்வாளர் அவர்களுக்கும் எம் நன்றி.

**நடன. காசிநாதன்**
**இயக்குநர்.**

# ஊரும் பேரும்

குடமூக்கு, குடந்தை, கும்பகோணம் என்று பலவாறாக இவ்வூர் அழைக்கப்படும். இவ்வூரிலுள்ள திருக்கோயில்களில் கும்பேசுவரர் கோயில் தனிச்சிறப்புடையது. இக்கோயில் இவ்வூரின் மேற்குத் திசையில் — முடுக்கில் — மேற்கு மூலையில் அமைந்திருப்பதால் இக் கோயிலுக்குக் குடமுடுக்குக் கோயில் என்று பெயரேற்பட்டு அதுவே 'குடமூக்கு' என்று வழங்குகிறது என்பர் குடமுடுக்கு அல்லது குடமூக்கு என்ற கோயில் பெயரே நாளடைவில் இந்த ஊருக்கும் வழங்க, இவ்வூர் குடமூக்கு ஆயிற்று என்றும் கூறுவர். குடமூக்கு, குடந்தை என்பதற்கு மேற்குமூலை என்று பொருள் கொள்ளலாம். காவிரி ஆறு இவ்வூரில் சிறிது வளைந்து செல்வதால் இவ்வூருக்கு குடமூக்கு என்ற பெயரேற்பட்டதாகவும் ஒரு கருத்து உண்டு. பூம்புகாரைத் தலைமையிடமாகக் கொண்ட சோழப் பேரரசின் மேற்குப் பகுதியில் அமைந்திருந்த முக்கியமான ஊர் என்ற பொருளில் இவ்வூருக்குக் குடமூக்கு, குடந்தை என்று பெயரேற்பட்டது என்றும் கருதலாம். முக்கோண வடிவில் ஒரு குடம் போன்றமைந்துள்ள காவிரி டெல்டாப் பகுதியில், அம்முக்கோணத்தின் மேற்கு முனையில் அமைந்துள்ள ஊர் என்ற பொருளிலேயே இவ்வூருக்குக் குடமூக்கு என்ற பெயரேற்பட்டது என்று இட அமைப்பியல் முறையில் இவ்வூரின் பெயருக்கு மற்றொரு காரணமும் சொல்லப்படுகிறது. இதேபோல் மேற்கு மூலையில் அமைந்துள்ள ஊர் என்ற பொருளில் உலகில் வேறு பல ஊர்களும் உள்ளன. இங்கிலாந்தில் உள்ள வெஸ்ட் எண்ட் மகாவம்சத்தில் குறிக்கப்படும் அபராந்தகம் போன்ற ஊர்கள் இவ்வகைக்குச் சிறந்த எடுத்துக்காட்டுகள். குடமூக்கு, குடந்தை என்ற பெயரே காலப்போக்கில் வடமொழியாக்கப்பட்டு இன்றைய தினம் கும்பகோணம் என்று வழங்கி வருகிறது.

## புராணரீதியாக

இவ்வூருக்குப் புராணரீதியாக மற்றொரு பெயர்க் காரணமும் சொல்லப்பட்டு வருகிறது. பேரூழிக்காலம் வந்து உலகம் அழிந்து விட்டால் மீண்டும் உயிர்களை உருவாக்குவது சிரமம் என்பதால், பேரூழி தோன்றுவதற்கு முன்னர், சிவபெருமான், அமுதமும்

மண்ணும் கலந்த குடம் ஒன்றைச் செய்து அக்குடத்திற்குள் பத்திரமாகப் படைப்புத் தொழிலுக்குப் பயன்படும், சிருட்டி பீஜத்தை வைத்து அக்குடத்தை மாவிலை, தேங்காய், வில்வம், நூல் ஆகியவற்றால் அணி செய்து அதனை மேரு மலையில் உறியில் வைக்குமாறு பிரமனைப் பணிக்க, நான்முகனும் அவ்வாறே செய்தார். பிரளயம் வந்தபோது பிரளயத்தில் அந்தக் குடம் தெற்கு நோக்கி வந்தது; இவ்வூருக்கருகில் வந்தபோது, குடம் நீர்ச்சுழியில் சுழன்றது; குடத்திலிருந்த மாவிலை, தர்ப்பை போன்றவை நெகிழ்ந்து வீழ்ந்தன. சிவபெருமான் வேடர் வடிவில் எழுந்தருளி அம்பினால் எய்ய குடமானது உடைந்து மூக்கின் வழியே அமுதம் நான்கு பக்கங்களிலும் பரவியது. இதனால் இவ்வூருக்குக் குடமூக்கு என்ற பெயரேற்பட்டது என்பர். "குடம்" என்பதைக் "கும்பம்" என்றும் "மூக்கு" என்பதைக் "கோணம்" என்றும் வடமொழியாக்கி இவ்வூரைக் "கும்பகோணம்" என்றழைக்கலாயினர்.

---

## ஒட்டக்கூத்தர் வணங்கிய காளி

ஒட்டக்கூத்தர் கும்பகோணத்தில் உள்ள முளைச் சாலம்மையை வணங்கியே 'தக்கயாகப் பரணி' இயற்றியதாகக் கூறப்படுகிறது.

## ஒட்டக்கூத்தர் பாடிய இராசராசேசுவரர்

இரண்டாம் இராசராச சோழன் மேலைச் சாளுக்கியர்களுக்காக வேண்டி, காலசூரி அரசர்களை அழித்தான். சிவபெருமான் தேவர்களுக்காக வேண்டி தட்சனை அடக்கினார். இராசராசன் நேரடியாகப் போரிடாமல் வெலநாட்டு மன்னன் இராசேந்திரசோடனை அடக்கினார்; சிவபெருமானும் தட்சனை நேரடியாக அடக்காமல் வீரபத்திரரைக் கொண்டு அடக்கினார். இந்த வகையில் செயலால் இரண்டாம் இராசராசனும், சிவபெருமானும் ஒத்த தன்மையினராகின்றனர். எனவே சிவபெருமானைப் போலவே இரண்டாம் இராசராசனும் வெற்றிக்களிப்பிற்குரியவராகிறார். சிவபெருமானைப் பாடுவது இரண்டாம் இராசராசனை வாழ்த்திப்பாடுவதாகிறது.

# அகழாய்வு தரும் ஆதாரம்

தமிழ்நாட்டின் வரலாற்றுக்கு முந்தைய காலத்தைப் பற்றி தெரிந்துகொள்ள வேண்டுமென்றால் அகழாய்வு மூலமாகத்தான் தெரிந்து கொள்ள இயலும். சென்ற ஐம்பது ஆண்டுகளாகத் தமிழகத்தில் பல இடங்களில் அகழாய்வு செய்யப்பட்டுள்ளன. இதுவரை சுமார் 25 இடங்களில் அத்தகைய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. அவற்றில் குறிப்பாகக் காவிரிப்பூம்பட்டினம், கரூர், கொற்கை, அழகன்குளம், கங்கைகொண்டசோழபுரம், உறையூர், பழையாறை, கொடுமணல் ஆகிய இடங்களில் மேற்கொண்ட அகழாய்வுகளைப் பற்றி குறிப்பிடலாம். மேற்காணும் அகழாய்வுகளின் மூலமாக தமிழகத்தின் பண்டைய வரலாறு ஓரளவுக்குத் தெரிய வந்துள்ளது. தமிழகத்தைப் பொறுத்தவரை பழைய கற்காலம் தொடங்கி வரலாற்றுக் காலம் வரை தொடர்ச்சியாக மக்கள் வாழ்ந்துகொண்டிருந்தார்கள் என்பது தமிழகத்தில் கிடைத்துள்ள பல தொல்லியல் சான்றுகள் மூலம் நாம் அறிய முடிகிறது.

பழைய கற்கால மனிதர்கள் பெரும்பாலும் தொண்டை மண்டலப் பகுதிகளில் வாழ்ந்திருக்கிறார்கள் என்பதும், நுண் கற்கால மனிதர்கள் திருநெல்வேலி மாவட்டப் பகுதியிலும், புதிய கற்கால மனிதர்கள் தர்மபுரி, சேலம், வடஆற்காடு அம்பேத்கார் மாவட்டப் பகுதிகளிலும் பரவலாக வாழ்ந்திருக்கிறார்கள் என்பதும், பெருங் கற்கால மக்கள் தமிழகத்தினுடைய அனைத்துப் பகுதிகளிலும் தங்கள் வாழ்க்கையை அமைத்துக் கொண்டனர் என்பதும் அச்சான்றுகள் நமக்குப் புலப்படுத்துவனவாகும். குறிப்பாகத் தஞ்சை மாவட்டத்தில் சில இடங்களில் நுண்கற்கால மக்கள் வாழ்ந்திருக்கிறார்கள் என்பதும், பெருங்கற்கால மக்கள் பரந்த அளவில் வாழ்க்கையை அமைத்துக் கொண்டிருந்தனர் என்பதும் இப்பகுதியில் கிடைத்துள்ள தொல்லியல் சான்றுகளால் புலப்படுகின்றன. குறிப்பாகப் பழையாறை மற்றும் தற்காலத்திய கும்பகோணம் பகுதிகளுடைய வரலாறு, பெருங்கற்காலம் முதல்தான் தொடங்கப்

படுகிறது என்பது இப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வின் மூலம் தெரியவந்துள்ளது.

சென்னைப் பல்கலைக்கழகத் தொல்லியல் துறை பழையாறையை அடுத்துள்ள நந்தன்மேடு என்ற இடத்திலே 1961-62-ஆம் ஆண்டுகளில் அகழாய்வை மேற்கொண்டது. நந்தன்மேடு என்னும் பகுதி சிறு குன்று போன்ற மேடான பகுதியாகும். அம்மேட்டுப் பகுதி பட்டீஸ்வரம் என்ற ஊரின் அருகே ஓடுகின்ற திருமலைராயன் வாய்க்காலின் வடக்குக் கரைப் பகுதியாகும். இத்திருமலைராயன் வாய்க்கால் கரைகளை ஒட்டியே பல உறைகிணறுகளும் முதுமக்கள் தாழிகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. நந்தன்மேடு என்னும் இந்த மேட்டுப் பகுதியில் அகழாய்வு செய்தபொழுது பெருங்கற்காலக் கருப்பு சிவப்பு பானை ஓடுகளும், வழவழப்பான சிவப்பு பானை ஓடுகளும் கண்டெடுக்கப்பட்டிருக்கின்றன. இம்மேட்டிலிருந்து சற்று தொலைவில் ஒரு முதுமக்கள் தாழியும் கண்டெடுக்கப்பட்டிருக்கிறது. மேலும் சில உறைகிணறுகளும் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. இந்நந்தன்மேடு என்னும் பகுதியானது கும்பகோணத்திலிருந்து எட்டு கி.மீ. தொலைவில் உள்ளது.

1964—65-ஆம் ஆண்டுகளில் சென்னைப் பல்கலைக்கழகத் தொல்லியல் துறை பழையாறையை அடுத்துள்ள சோழ மாளிகையில் மேற்கொண்ட அகழாய்வின் மூலம் பெருங்கற்காலம் முதல் பிற்காலச் சோழர் காலம் வரை தொடர்ந்து அப்பகுதியில் மக்கள் வாழ்ந்து வந்திருக்கிறார்கள் என்பது தெரிய வந்துள்ளது. அகழாய்வு மேற்கொண்ட இடத்திலிருந்து சுமார் 100 மீ. தொலைவில் 1.6 மீ. குறுக்களவில் ஒரு உறைகிணறு இருந்ததும் கண்டுபிடிக்கப்பட்டது.

தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை 1984-ஆம் ஆண்டு பழையாறை என்னும் இடத்தில் அகழாய்வை மேற்கொண்டது. இப்பழையாறை பிற்காலச் சோழர்கள் காலத்தில் சோழர்களின் தலைநகரங்களுள் ஒன்றாக விளங்கியது. அதாவது பிற்காலச் சோழர்கள் தஞ்சையைத் தலைநகரமாகக் கொள்வதற்கு முன்பாகப் பழையாறையைத் தங்கள் தலைநகரமாகக் கொண்டிருக்கின்றனர். பழையாறை வட தளி, மேற்றளி என்று தேவார பாடல்களில் இவ்வூர்க் கோயில்கள் குறிக்கப்பட்டுள்ளன. பழையாறையில் 1000 கோயில்கள் இருந்திருக்கலாம் என்பது 'ஆயிரத்தளி' என்ற

பெயரும் இவ்வூருக்கு வழங்கப்பட்டிருந்தது என்பதன் மூலம் தெரிய வருகிறது. இவ்வூர் கீழ்ப்பழையாறை என்றும் வழங்கப் பட்டிருக்கிறது. கும்பகோணத்திலிருந்து சுமார் 7 கி.மீ. தொலைவில் இவ்வூர் அமைந்துள்ளது. இவ்வூரைச் சுற்றி முழையூர், சோழ மாளிகை, இராஜேந்திரன் பேட்டை, நந்தன்மேடு ஆகிய ஊர்கள் காணப்படுகின்றன. பம்பப்படையூர் என்ற ஊரும் இதன் அருகில் அமைந்துள்ளது. இவ்வூர்ப் பல்லவர் காலத்தில் 'நந்திபுரம்' என்று அழைக்கப் பெற்றிருக்கிறது. முதலாம் இராஜராஜன் காலத்தில் பழையாறை என்னும் நந்திபுரம் என்றும் அழைக்கப்பட்டிருக்கிறது. அதற்கு பிறகு முடிகொண்ட சோழபுரம், ஆகவமல்லகுலகாலபுரம் என்றும் அழைக்கப்பட்டிருக்கிறது. கல்வெட்டுக்கள் இவ்வூரில் அமைந்திருந்த அரண்மனையையும், அதன் பல்வேறு பகுதிகளைப் பற்றியும் தெரிவிக்கின்றன. முதலாம் இராஜேந்திரன் கல்வெட்டில் இவ்வூரிலிருந்த அரண்மனை 'மதுராந்தக மாளிகை' என்று குறிக்கப் பட்டிருக்கிறது. அம்மாளிகையிலிருந்த பல்வேறு பகுதிகளாக 'ஆதிபூமி', 'இராஜேந்திர சோழன் மண்டபம்', 'வாணாதிராயன் இருக்கை' ஆகியவை கல்வெட்டுக்களில் காணப்படுகின்றன.

இவ்வூரின் மூன்று இடங்களில் அகழாய்வுக் குழிகள் தோண்டப் பெற்றன. அக்குழிகள் பி.ஆர்.ஐ. 1, பி.ஆர்.ஐ. 2, பி.ஆர்.ஐ. 3 என்று அழைக்கப்பட்டன. பி.ஆர்.ஐ. 1, என்ற குழி இவ்வூரில் அமைந்துள்ள சோமநாதசாமி கோயிலின் தென்கிழக்குப் பகுதியில் மேடாகக் காணப்படும் இடத்தில் தோண்டப்பெற்றது. இக்குழி 4 x 4 என்ற அளவில் அமைந்தது. இக்குழியில் மொத்தம் மூன்று பாள நிலைகள் காணப்பட்டன. முதல் பாளநிலை பழுப்பு நிறப் பொடி மண்ணால் அமைந்ததாகும். இப்பாளத்தில் செங்கல் துண்டுகளும், பிற்காலத்தியப் பானை ஓடுகளும், சில கூரை ஓடு களும் கண்டெடுக்கப்பட்டன. இக்குழியின் மேற்கு மற்றும் தெற்குச் சுவர்களையொட்டி களிமண் படிவம் காணப்பட்டது. இப்பாளம் 50 முதல் 60 செ.மீ. அளவிற்கு உயரம் உடையதாக இருந்தது. இரண்டாம் பாளம் சாம்பல் நிறப் பொடி மண்ணைப் பெற் றிருந்தது. இப்பாளத்தில் செங்கல் துண்டுகளும், பானை ஓடு களும், கூரை ஓடுகளும் கண்டெடுக்கப்பட்டன. இப்பாளம் 30 முதல் 50 செ.மீ. வரை உயர்ந்து காணப்பட்டது. மூன்றாவது பாளத்தில் குறைந்த அளவு செங்கல் துண்டுகளும், நிறைந்த அளவு பானை

ஓடுகளும் கண்டெடுக்கப்பட்டன. மேற்குச் சுவர் அருகில் ஒரு குழி காணப்பட்டது. மேல் இரண்டு பாளங்களிலும் கிடைத்த பானை ஓடுகள் தடிப்பான சிவப்பு நிற பானை ஓடுகளும், குறைந்தளவில் கூரை ஓடுகளும் மற்றும் துளையிடப்பட்ட பானை ஓடுகளும் காணப்பட்டன. மூன்றாவது பாளத்தில் மிகுந்த அளவில் சோழர் காலத்தியப் பானை ஓடுகளும், வேலைப்பாடு அமைந்த பானை ஓடுகளும், மிகச் குறைந்த அளவில் கருப்பு சிவப்பு ஓடுகளும் காணப்பட்டன. மேற்காணும் பானை ஓடுகளை வைத்துப் பார்க்கையில் கி. பி. 4 அல்லது 5 நூற்றாண்டு முதல் கி. பி. 14-ஆம் நூற்றாண்டு வரை மக்கள் வாழ்ந்திருந்த பகுதியாக இப்பகுதி காணப்படுகிறது.

பி.ஆர்.ஐ. 2 என்ற குழி 5 x 3 மீ. அளவில் தோண்ட பெற்றது. இக்குழி கீழ்ப்பழையாறையிலிருந்து நாதன் கோயிலுக்குச் செல்லும் சாலைக்குத் தெற்குப்பகுதியில் காணப்படும் ஒரு மேட்டில் தோண்டப் பெற்றதாகும். இந்தக் குழியில் குறிப்பிடத்தக்கத் தொல்பொருள்கள் ஏதும் கிடைக்கவில்லை. மிகக் குறைந்த அளவில் சோழர் காலத்திய கூரை ஓடுகளும், தடித்த சிவப்பு வண்ணப் பானை ஓடுகளும் சில செங்கல் துண்டுகளும் சேகரிக்கப்பட்டன. பி.ஆர்.ஐ. 3 என்ற குழி நீண்ட சதுரமாக அமைந்த குழி ஆகும். 5 x 3 மீ. அளவில் அமைந்த குழி ஆகும். இக்குழி பி.ஆர்.ஐ. 2 என்ற குழிக்கு வடக்கில் அமைந்துள்ளது. இக்குழியில் 85 செ.மீ. ஆழத்தில் ஒரு செங்கற் சுவர் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. இச்சுவர் ஐந்து அடுக்குகளால் அமைக்கப் பெற்றிருந்தன. இச்சுவற்றில் காணப்பெறும் செங்கல்லின் அளவு 24 x 12 x 4 செ.மீ. ஆகும். இந்த செங்கற் சுவரில் இருந்த கற்கள் ஒரு சில இடங்களில் பிற்காலத்து மக்களால் தோண்டி எடுக்கப்பட்டிருந்தன. இச்சுவரானது தமிழ்நாட்டில் தற்போது அமைக்கப்படும் முறையை ஒட்டியே அமைக்கப் பட்டிருந்தது. இதே முறை முதலாம் இராஜேந்திர சோழனால் அமைக்கப் பெற்ற மாளிகையிலும் காணப்படுகிறது. இக் குழியில் இரண்டு பாள நிலைகள் காணப்படுகின்றன. இரண்டு பாள நிலையிலும் பிற்காலத்தியத் தடிப்பான சிவப்பு பானை ஓடுகளும், சில கருப்பு வண்ண பானை ஓடுகளும், வண்ணம் தீட்டப் பெற்ற பானை ஓடுகளும், நீண்ட சதுர அமைப்பில் உள்ள கூரை ஓடுகளும், சில குறிப்பிடத் தகுந்த மண் விளக்கு

களும், மற்றும் மூக்கோடமைந்த கெண்டிகளும் கிடைத்துள்ளன.

மேற்காணும் பானை ஓடுகளைக் கொண்டு இந்த பாள நிலைகள் தோராயமாக கி.பி. 10-ஆம் நூற்றாண்டு முதல் 14-ஆம் நூற்றாண்டு வரை வாழ்ந்த மக்களால் ஏற்படுத்தப்பட்டவைகளாக இருந்திருக்கலாம் என்று அறிய முடிகிறது.

பழையாறையில் மேற்கொண்ட அகழாய்வின் மூலம் சில வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தொல்பொருட்கள் கிடைத்துள்ளன. வேலைப்பாடமைந்த பானை ஓடுகளும் மற்றும் சில மண் விளக்குகளும் கிடைத்திருப்பது குறிப்பிடத் தக்கவையாகும். சில பானை ஓடுகளில் வண்ணங்கள் நேர்கோடுகளாகவும், குறுக்குக் கோடுகளாகவும் தீட்டப் பெற்றிருப்பது அக்கால மக்களுடைய கலைத் திறனைப் புலப்படுத்துவதாக உள்ளது. சில கருப்பு நிற பானை ஓடுகளில் செங்காவி நிறத்தில் தீட்டப்பெற்ற சில கோடுகளும் காணப்படுகின்றன.

இவ்வகழ்வாய்வில் குறிப்பிடத் தகுந்த அளவுக்கு இரும்பு ஆணிகள் சுமார் 2 செ.மீ. முதல் 5 செ.மீ. நீளமுள்ளவை கண்டெடுக்கப்பட்டன. இந்த ஆணிகள் மரச் சட்டங்களை ஒன்றோடொன்று இணைப்பதற்கு பயன்படுத்தப்பட்டவையாக இருக்கலாம். ஆதலால் இங்கு அமையப்பெற்றிருந்த கட்டடங்களின் கூரைப்பகுதிகள் மரங்களால் அமைக்கப்பட்டு ஆணிகளைக்கொண்டு பொருத்தப்பட்டிருந்தது என்று தெரியவருகிறது. மிகக் குறைந்த அளவில் செப்பு ஆணிகளும், செப்புக் குமிழ்களும் கூட கண்டெடுக்கப்பட்டன. இவை முக்கியக் கதவுகளில் பொருத்தப்பெற்றவையாக இருக்கலாம். மேலும் பல நிறங்களில் உள்ள வளையல் துண்டுகள் கண்டெடுக்கப்பட்டன. இவ்வளையல் துண்டுகள் அனைத்தும் கண்ணாடியால் செய்யப்பெற்றவை. ஆகவே சோழர்காலத்தில் கண்ணாடி வளையல்கள் அணியும் பழக்கம் இருந்தது என்பது புலனாகிறது.

இங்கு இரண்டு வகை விளக்குகள் கிடைத்துள்ளன. முதல்வகை அகல்விளக்கு ஆகும். இரண்டாம் வகை நான்கு திரிகள் எரியக் கூடிய வட்ட வடிவ விளக்கு ஆகும். இந்த விளக்கின் மையப் பகுதியில்

ஒரு துவாரம் காணப்படுகிறது. அதிலும் திரியைக் கொண்டு எரித்திருப்பது தெரிய வருகிறது. மேலும் மூக்குடைய சில மட்கலங்கள் பிற்காலச் சோழர் காலத்தில் பயன்படுத்தப் பட்டிருக்கிறது என்பது இங்கு கிடைத்திருக்கின்ற பானை ஓடுகளின் மூலம் தெரிய வருகின்றது. சிவப்பு வண்ணத்தில் அமைந்த முழு வடிவில் உள்ள ஒரு கெண்டியும் கிடைத்திருப்பது முக்கியத்துவம் வாய்ந்தது. இதே போன்று ஒரு கெண்டி கங்கை கொண்ட சோழபுரத்தில் நிகழ்த்தப் பெற்ற அகழாய்விலும் கிடைக்கப் பெற்றது. இங்கு கிடைத்துள்ள கெண்டி அமைப்பில் உள்ள மட்கலங்கள் ஐந்து வகையினதாகக் காணப்படுகின்றன.

மேலும் பி.ஆர்.ஐ. 3 என்ற குழியில் கால்களை விரித்து வைத்திருக்கின்ற நிலையில் உள்ள சுடுமண் பொம்மை ஒன்று கிடைத்திருப்பது முக்கியத்துவம் வாய்ந்ததாகும் இச்சுடுமண் பொம்மையைப் போன்று பல பொம்மைகள் கோயம்புத்தூர் மாவட்டத்தில் போளுவாம்பட்டி என்ற இடத்தில் நிகழ்த்தப் பெற்ற அகழாய்விலும் கிடைத்துள்ளன.

மேற்காணும் தொல்பொருள்களைக் கொண்டு பழையாறையில் கி.பி. 5-6ம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 14ம் நூற்றாண்டு வரை தொடர்ந்து மக்கள் வாழ்ந்திருக்கிறார்கள் என்பதும்; அவர்கள் வேலைப்பாடமைந்த வண்ணம் திட்டப் பெற்ற மட்கலங்களையும், மூக்குகள் அமைந்த கெண்டி போன்ற மட்கலங்களையும் பயன் படுத்தி இருக்கிறார்கள் என்பதும், கண்ணாடியால் செய்யப் பெற்ற வளையல்கள் அணிந்திருக்கிறார்கள் என்பதும், மண் விளக்குகளைக் கொண்டு வீடுகளை அலங்கரித்து மகிழ்ந்திருக்கிறார்கள் என்பதும், சுடுமண் பானை போன்ற உருவங்களை வழிபாட்டிற்கோ அல்லது சிறுவர்கள் விளையாடுவதற்கோ பயன்படுத்தியிருக்கிறார்கள் என்பதும் நமக்குத் தெரிய வருகிறது.

மேலும் இங்கு வாழ்ந்த மக்கள் செங்கற்களால் வீடுகளை அமைத்துக் கொண்டு, கூரைப் பகுதியை மரக் கம்பங்களைக் கொண்டும், இரும்பு ஆணிகளை கொண்டும் ஒன்று சேர்த்திருக் கிறார்கள் என்பது தெரிய வருகிறது. அத்தோடு சில முக்கியக் கதவுகள் போன்ற பகுதிகளுக்குச் செப்பு ஆணிகளையும் செப்பு குமிழ்களையும் பயன்படுத்தியிருக்கிறார்கள் என்பதையும் உணர

முடிகிறது. சோழர் காலத்தில் தலைநகரமாக விளங்கிய பழையாறை, பிற்காலப் பாண்டியர் காலம் வரை மிகுந்த செல்வாக்கோடு விளங்கியிருந்ததென்பது இங்கு நிகழ்த்தப் பெற்ற அகழாய்வு மூலம் தெரிய வருகிறது.

1985-86-ஆம் ஆண்டுகளில் மத்திய தொல்பொருள் ஆய்வுத்துறை கும்பகோணத்தை அடுத்துள்ள தாராசுரத்தில் அகழாய்வு மேற்கொண்டது. இவ்வகழாய்வு அயிராவதேசுவரர் ஆலயக் கோபுரத்துக்கு வெளிப்புறத்திலும் உட்புறத்திலும் நிகழ்த்தப் பெற்றது. செங்கல் கட்டடம் ஒன்று புதியதாகவும் மற்றும் மேலைக் கோபுரத்தினுடைய அடித்தளப் பகுதியும் கண்டுபிடிக்கப்பட்டன. மேலும் நீண்ட சதுர அமைப்பில் அமைந்த ஒரு பெரிய கல் அடித் தளமும் கண்டுபிடிக்கப்பட்டது. இவ்வடித்தளம் 15·5 மீ. வடக்குத் தெற்காகவும், 11·5 மீ. கிழக்கு மேற்காகவும் காணப்படுகிறது. இந்த அடித்தளம் எதற்காக அமைக்கப்பட்டது என்பது மேலும் ஆய்வு செய்வதற்கு உரியதாகும். இவ்வகழாய்வில் குறிப்பிடத் தகுந்த பல தொல்பொருட்கள் கிடைத்துள்ளன. சான்றாகச் சுதைச் சிற்பங்கள், கல்லால் செய்யப்பட்ட அதிகார நந்தி, சாமுண்டி ஆகியவற்றைக் குறிப்பிடலாம்

மத்திய தொல்பொருள் ஆய்வுத்துறையே இக்கோயிலின் உட்பிரகாரத்தையும் தூய்மை செய்தபொழுது சில கற்சிலைகளும், செப்புப் படிமம் ஒன்றும் கிடைத்துள்ளன. அச்செப்புப் படிமம் 63 நாயன்மார்களுள் ஒருவரான சிறுத்தொண்ட நாயனாரின் படிமம் ஆகும். தமிழகத்தில் சிறுத்தொண்ட நாயனாரின் செப்புப் படிமம் கிடைத்திருப்பது இதுவே முதலாவதாக இருக்கும் என்று கருதப் படுகிறது. துர்க்கை, தவழும் கண்ணன் மற்றும் சில அடியார்களின் சிற்பங்கள் இங்கு கண்டெடுக்கப்பட்டுள்ளன. இவற்றோடு கோயிற் பூசைக்குப் பயன்படுத்தப்படும் சில பரிகலன்களும், மணிகளும், சர விளக்குகளும் கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். மேலும் ஆறு செப்பு வளையல்களும், இவற்றோடு கிடைத் துள்ளன. இவை மட்டுமல்லாமல் 279 சோழர் காலத்திய செப்புக் காசுகளும் குவியலாகக் கிடைத்துள்ளன.

மொத்தத்தில் கும்பகோணமும் கும்பகோணத்தைச் சுற்றியுள்ள பகுதிகளும் பெருங்கற்காலத்தில் இருந்து, அதாவது கி.மு. 5 அல்லது

4-ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 14-ஆம் நூற்றாண்டு வரை தொடர்ந்து மக்கள் வாழ்ந்து வந்த இடங்களாகவும் வரலாற்றுச் சிறப்புக்களைப் பெற்றிருந்த தலங்களாகவும் காணப்படுவது குறிப்பிடத்தக்கதாகும். ★

## மகாமகத்திற்கு மாமன்னர் கிருட்டின தேவராயர் வருகை

செங்கற்பட்டு எம்.ஜி.ஆர். மாவட்டம், பொன்னேரிக்கருகிலுள்ள நாகலாபுரத்திலிருக்கும் அருள்மிகு வேதநாராயணப் பெருமாள் திருக்கோயிலின் வடக்குக் கோபுர நுழைவாயிலில் உள்ள கல்வெட்டொன்று, விசயநகர வேந்தர் கிருட்டினதேவராயர், தமது வடக்குப் படையெடுப்பை வெற்றிகரமாக முடித்துக் கொண்டு திரும்பியவுடன் கும்பகோணம் மகாமக விழாவிற்கு வரும்வழியில், நாகலாபுரம் வேதநாராயணப் பெருமாள் கோயிலுக்கும் வந்து சென்றதைப் பற்றிக் குறிப்பிடுகிறது. கல்வெட்டின் காலம் கி. பி. 1523 (சக ஆண்டு 1445).

## கும்பகோணம் 'சுபா'

தஞ்சையை ஆண்ட மராட்டிய மன்னர்கள் தங்களது ஆட்சிக்கு உட்பட்டிருந்த பகுதியை நிர்வாக வசதிக்காக ஐந்து சுபாக்களாகப் பிரித்திருந்தனர். அந்த ஐந்து சுபாக்களுள் கும்பகோணமும் ஒன்று. மற்ற சுபாக்கள்: பட்டுக்கோட்டை, மன்னார்குடி, மாயூரம் (மயிலாடுத்துறை), திருவாதி (திருவையாறு). ஆகும்.

இதற்குப் பின்னர், தஞ்சை மராட்டிய மன்னர்களின் ஆட்சிக் குட்பட்டிருந்த பகுதி ஒன்பது வட்டங்களாகப் (தாலுக்காக்களாக) பிரிக்கப்பட்டது. அந்த ஒன்பது வட்டங்களுள் கும்பகோணமும் ஒன்று. ஏனைய எட்டு வட்டங்கள்,

1) திருவாதி (திருவையாறு) 2) மாயவரம் (மயிலாடுதுறை) 3) பாபநாசம் 4) திருவாரூர் 5) நன்னிலம் 6) கீவளூர் 7) மன்னார்குடி 8) பட்டுக்கோட்டை என்பனவாகும். ★

# இலக்கியங்களில் கும்பகோணம்

## சங்க இலக்கியங்களில்

இவ்வூர் ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகளாக வரலாற்றுச் சிறப்புடன் விளங்கி வருகிறதென்பதைச் சங்க இலக்கியங்கள் புலப் படுத்துகின்றன. சங்க காலத்தில் சோழரின் பெருநிதி இவ்வூரில் சேமித்து வைக்கப்பட்டிருந்தது என்பதைனக் "கொற்றச் சோழர் குடந்தை வைத்த நாடுதரு நிதி" என்ற அகநானூற்றுப் பாடல் (60) அடி தெளிவுப்படுத்துகின்றது. குடந்தையைச் சூழ்ந்து கோட்டை மதிலும், மதிலைச் சூழ்ந்து அகழியும், அகழியில் நீலப் பூக்களும் இருந்ததை நற்றிணைப் பாடல் (379) படம்பிடித்துக் காட்டுகிறது. கும்பகோணத்திற்கருகிலுள்ள குடவாசலில் சோழர் களின் சிறைச்சாலையான "குடவாயிற் கோட்டம்" இருந்திருக் கிறது. இவ்வாறு இப்பகுதி சங்க காலத்திலேயே தனிச்சிறப்புடன் விளங்கியிருக்கிறது.

## ஆழ்வார் பாசுரங்களில்

முதல் மூன்று ஆழ்வார்களில் ஒருவரான பூதத்தாழ்வார் தஞ்சையைத் திருமாலின் தலையாகவும்; திருவரங்கத்தைக் காலாகவும்; மாமல்லை, கோவல், மதிட் குடந்தை ஆகிய திருப்பதிகளை அரங்கனின் அங்கங்களாகவும் சிறப்பித்துப்பாடு கிறார். மேலும் குடந்தையில் கிடந்தானைச் "செங்கண் நெடுமால் திருமார்பா" என்றும் "படமூக்கினா யரவாய்ப் பாம்பணை மேல் சேர்ந்தாய்" என்றும் பக்தியுடன் பரவுகிறார். அடுத்தவரான பேயாழ்வாரும் "தென் குடந்தை, தேனார் திருவரங்கம் தென் கோட்டியூர்" என்று திருவரங்கம், திருக்கோட்டியூர் ஆகிய ஊர்களுக்கு ஈடாகக் குடந்தையைச் சிறப்பித்துப் பாடுகிறார்.

மூவருக்குப் பின் வந்த திருமங்கை ஆழ்வார் கும்பகோணத்தைப் "புதுமலர்ச் சோலை" "பொன்னி மணி கொழிக்கும் பூங்குடந்தை" "குயில் ஆலும் வளர்பொழில் சூழ் தண் குடந்தை", "அன்னம் துணையொடு புணரும் சூழ் புனல் குடந்தை" என்றெல்லாம்

சிறப்பித்துப் பாடுகிறார். மேலும் அங்கு கிடந்த கோலத்தில் உள்ள இறைவனை "ஆடு அரவு அமளியில் அறிதுயில் அமர்ந்த பரம" என்று போற்றி மகிழ்ந்துள்ளார்.

பெரியாழ்வார் குடந்தைக் கிடந்தானைக் 'கொங்கும் குடந்தையும் கோட்டியூரும், பேரும் எங்கும் திரிந்து விளையாடும் என் மகன், என்று கூறி அவன் "ஆலைத்திலையானரவினணை மேலோன் நீலக் கடலுள் நெடுங்காலம் கண் வளர்ந்தான்" என்று குறிப்பிடுகிறார். மேலும் கண்ணன் இளம் பருவத்தில் அர்ச்சுனனுக்கு அருள்புரிந்ததையும், இரணியன் ஆகம் கீண்டதையும் எடுத்துக் கூறி "குடந்தைக் கிடந்த என் கோவே" என்று போற்றித் தலை வணங்குகிறார்.

பூதத்தாழ்வார், பேயாழ்வார், திருமங்கை, பெரியாழ்வார் ஆகிய ஆழ்வார்களால் பாடப்பெற்ற இக்குடந்தைப் பெருமானைத் திருமழிசையாழ்வாரும், நம்மாழ்வாரும் தம் பாசுரங்களில் பாடியுள்ளனர்.

## தேவாரத் திருப்பதிகங்களில்

சமயக் குரவர் நால்வருள் முதல்வரான அப்பர் பெருமான் பல்வேறு சைவத் திருத்தலங்களைத் தரிசித்த பிறகு திருக்குடமூக்கு எனும் கும்பகோணத்தை அடைந்து, அவ்வூரின் சிறப்பைப் பலபடப் போற்றிப் பாடுகிறார். "கோலமணி கொழித் திழியும் பொன்னி நன்னீர்க் குடந்தை"; கனி சிதறி தேறல் பாயும் குடந்தை"; காவிரி நல்யமுனை, கங்கை, சரசுவதி, பொற்றாமரைப் புட்கரணி, தெண்ணீர் கோவிலொடு குமரி வரு தீர்த்தஞ் சூழ்ந்த குடந்தை என்றெல்லாம் குடந்தையை வருணிக்கிறார். குடமூக்கு இறைவனைப் பக்திப் பரவசத்துடன் "திருநீறு மெய்பூசியோர் கோவணத் துடையான்" என்றும்; "நங்கையாளுமையாளுறை நாதன்" என்றும், போற்றி, "ஓதா நாவன் திறத்தை உரைத்தீரேல் ஏதானும் இனிதாகும்" என்றெல்லாம் வாயாரப் புகழ்கிறார்.

ஞானப்பாலுண்ட திருஞான சம்பந்தரும் திருக்குடந்தையின் இயற்கையழகைக் "குலை மலி தண்பலவின் பழம் வீழ் குடமூக்கு; கொடுமடல் தங்கு தெங்கு பழம் வீழ் குடமூக்கு, கொடி நெடு மாடமோங்கு குழகன் குடமூக்கு" என்றெல்லாம் பாராட்டுகிறார்.

குடந்தைக் காரோணத்து இறைவனை "அடுநோய் அவலத்தைத் தீர்ப்பவன்" என்றும்; வினைகளால் நலியாவண்ணம் அருள்பவர்; காலன் அணுகாதவாறு காப்பவர், அயனாலும், மாலாலும் அறிய வொண்ணா காலகாலர் என்றெல்லாம் போற்றிப் புகழ்கிறார். இவரது குடந்தைக் காரோணப் பாடல்களை "உரைப்பவர் உலகத்து கருவார் இடும்பை பிறப்பறுத்துக் கவலை கழிவார்" என்றும் கூறப் பட்டுள்ளது

## சிற்றிலக்கியங்களில்

### கும்பகோணப் புராணம்

சொக்கப்ப நாவலரால் இயற்றப்பட்ட கும்பகோணப் புராணம், மராட்டிய மன்னன் ஷாஹஜியின் அவையில் அரங்கேறிய பெருமை யுடையது. சொக்கப்ப நாவலர் தொண்டை நாட்டு அரசூரைச் சேர்ந்தவர்,

அகோர முனிவர் (அகோர மாதவர்) என்பவரால் இயற்றப்பட்ட கும்பகோணப் புராணம் சுவடி வடிவில் உள்ளது. பதின்மூன்று சருக்கங்களையுடைய இப்புராண நூல் 1106 விருத்தப் பாக்களால் ஆனது.

மகாவித்வான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்களால் இயற்றப் பட்ட கும்பகோணப்புராணம் ஒன்றுள்ளது. இப்புராணம் 70 படலங்களுடையது; 2384 விருத்தப் பாக்களாலானது.

அகோர முனிவரால் இயற்றப்பட்ட புராணம், மற்றும் மீனாட்சிசுந்தரம் பிள்ளையால் இயற்றப்பட்ட புராணம் தவிர வேறொரு கும்பகோணப் புராணச் சுவடியும் கிடைத்துள்ளது. இது மிகவும் சிதைந்த நிலையில் இருப்பதால் இது சொக்கப்ப நாவலரால் இயற்றப்பட்ட புராணமாக இருக்கக்கூடுமா அல்லது இம்மூவரையும் தவிர்த்த நான்காமவர் ஒருவரால் இயற்றப்பட்டதா என்ற விபரங் கள் தெரியவில்லை.

### குடந்தைத் திரிபந்தாதி, மங்களாம்பிகை பிள்ளைத்தமிழ்

இந்நூல் 100 கலித்துறைப் பாடல்களால் ஆனது. மகா வித்வான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்களால் கும்பேசுவரர்

மீது பாடப்பட்டது. இதே போல இவரால் மங்களாம்பிகை மேல் பாடப்பட்ட மங்களாம்பிகை பிள்ளைத் தமிழ் ஒன்றுமுள்ளது.

### குடந்தைச் சிலேடை வெண்பா

இது யாழ்ப்பாணம் முருகேசம் பிள்ளை அவர்களால் இயற்றப் பட்ட நூல்.

### மங்களாம்பிகை மாலை

வி. சாமிநாத பிள்ளை என்பவரால் இயற்றப்பட்ட மங்களாம் பிகை மாலை ஒன்றுள்ளது.

### கும்பேசர் குறவஞ்சி

கி.பி. 18 ஆம் நூற்றாண்டில் கும்பகோணம் அருகிலுள்ள கொட்டையூரைச் சேர்ந்த சிவக்கொழுந்து தேசிகர் எழுதியுள்ள 'கும்பேசர் குறவஞ்சி' ஒன்றுள்ளது. ★

---

## கும்பகோணத்தில் கோவிந்த தீட்சதரின் திருப்பணிகள்

தஞ்சையை ஆண்ட நாயக்க மன்னரான அச்சுதப்ப நாயக்கரிடம் அமைச்சராக இருந்தவர் கோவிந்த தீட்சதர். இவர் "ஐயன்" என்று அழைக்கப்பட்டார். எனவே, கும்பகோணத்திலுள்ள ஐயன்தெரு இவர் பெயரால் ஏற்பட்ட தெருவாகும். கும்பகோணத்தில் நதி தீரத்தில் அமைந்துள்ள புஷ்ய மண்டபம் இவரது திருப்பணி என்றே கருதப்படுகிறது. "ராஜா வேத பாடசாலை" யும் இவரால் நிறுவப் பட்டதென்றே கூறுவர். இந்தப் பாடசாலைக்கடுத்த யாகசாலைத் தெரு இவருடைய வேள்விச்சாலை என்ற ஒரு கருத்துமுண்டு. ○

# மகாமகப் பெருவிழா

தென்னகத்தின் கும்பமேளா என்று அழைக்கப்படும் மகாமகப் பெருவிழா குடந்தையில் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை கொண்டாடப்படுகிறது. இவ்விழாவில் நாடு முழுவதிலுமிருந்து லட்சக்கணக்கான பக்தர்கள் கூடி மகாமகக் குளத்தில் நீராடுவது வழக்கம்.

## மகாமகப் பொய்கையின் பெருமை

இறையருளால் அமுதம் பொங்கியதாகக் கூறப்படும் இப்புனித மான தலத்தில் உள்ள மகாமகத் தடாகத்தில் 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை மாசி முழுமதி நாளில், குரு, சிம்ம ராசிக்குச் செல்லுங்கால் கங்கை, யமுனை, சரசுவதி, சரயூ, நர்மதை, துங்கபத்திரை, கோதாவரி, கிருஷ்ணை, காவேரி ஆகிய ஒன்பது கன்னியரும் மக்களால் தங்களிடத்து இடப்பட்ட பாவச்சுமையை நீராடிப் போக்கிக் கொள்வதாக ஐதிகம். மகாமகப் பெருவிழாவும், புனித நீராடலும் சிறப்புற நடைபெறும் அன்று நீராடினால் மேற் கண்ட புண்ணிய நதிகளில் நீராடியதற்கு ஒப்பாகும் என்று நம்பப்படுகிறது.

## மகாமகத் தீர்த்தம்

வட இந்தியாவில் கும்பமேளா போல தென்னகத்தில் மகாமகம் சிறப்பு வாய்ந்தது. கங்கை, யமுனை, சரஸ்வதி ஆகிய மூன்று நதிகள் இணையும் இடமான [திரிவேணி சங்கமம்] அலகாபாத்தில் கொண்டாடப்படும் கும்பமேளாவுக்கு இணையாகக் குடந்தையிலுள்ள மகாமகக் குளத்தில் இவ்விழா நடைபெறுகிறது. இந்தியாவிலேயே இந்தத் தீர்த்தம் மிகச் சிறப்புடையதாகக் கருதப் படுகிறது.

தமிழகத்தில் பொதுவாகக் கோயில், அது அமைந்துள்ள தலம், தீர்த்தம் ஆகிய மூன்றும் மூன்று கண்களாகப் போற்றப்படுகின்றன. கோயில்களுக்குரிய இறைவனின் பெருமையைத் தீர்த்தத்திற்கும்

தந்து பெருமைப்படுத்துகின்றனர். ஒரு புனித தலத்தில் இறைவனும் தீர்த்தமும் முறையாக அமையுமானால் அத்தலத்தில் சமயப் பெருமை ஓங்கி நிற்கிறது,

" மூர்த்தி தலம் தீர்த்த முறையாய்த் தொடங்கினர்க்கோர்
வார்த்தை சொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே "

என்று தாயுமானவரும் அச்சிறப்பை எடுத்துக் காட்டுகிறார். தமிழகத்தில் உள்ள புனிதத் தலங்களையொட்டி அமைந்துள்ள தீர்த்தங்களில் நீராடுவதால் பெருத்த பயன்கள் கிடைப்பதாகத் தல புராணங்கள் கூறுகின்றன. பல்வேறு மன்னர்கள், பெருமக்கள் முதலியோர் தீர்த்தங்களில் நீராடியதால் அவர்களிடமிருந்த நோய்கள் நீங்கியதாக அறிகிறோம்.

மாசி மகக் கடலாட்டு என்பது பண்டைக்காலம் தொட்டு இன்று வரை எல்லா கடற்கரைத் தலங்களிலும் நடபெறக் காண்கிறோம். இராமேஸ்வரம் முதல் சென்னை வரை உள்ள கடலோரக் கோயில் களில் மாசி மாதத்தில் இறை உருவங்களை ஊர்வலமாகக் கொண்டு வந்து கடலில் நீராட்டி குதூகலமாகக் கொண்டு செல்வதைப் பார்க்கலாம். இராமேஸ்வரம் கடலாட்டு மகப்பேறு தரும் என்பதும், காவிரி கடலோடு கலக்கும் முகத்துவாரத்தில் அமாவாசை மற்றும் மகாளய அமாவாசை அன்று நீராடுவதால் பல்வேறு பேறு களைப் பெறலாம் என்பதும், கங்கையிலும் குமரியிலும் நீராடினால் பாவங்கள் நீங்கும் என்பதும் மக்களின் பெருத்த நம்பிக்கையாகப் பண்டைய நாள் முதல் இருந்து வருகிறது. அவ்வகையில் கடலில் நீராடுவதும், தலங்களிலுள்ள குளங்களில் நீராடுவதும் புனிதமாகக் கருதப்பட்டு வருகிறது.

**மாமகம்**

இத்தலம் பற்றிய வரலாறு மிகவும் சுவையானது. பிரளய காலத்தில் உலகு அழிகிறபோது மீண்டும் படைப்பதற்கான மூலப் பொருட்களைக் காத்தருள வேண்டும் என்று நான்முகன் சிவனிடம் கேட்டார். அதற்குச் சிவபெருமான் உலகத்திலுள்ள உத்தமமான புண்ணியத் தலத்திலிருந்து மண் எடுத்துத் தேவாமிர் தத்தை விட்டுப் பிசைந்து ஒரு கலசம் செய்து அதை அமிர்தத்தால்

நிரப்பி வேதம், ஆகமம், புராணம், இதிகாசம் முதலிய அறிவுக் கருவிகள் அனைத்தையும் குடத்தில் பெய்து, மாவிலை பரப்பிக் குடத்து வாயில் தேங்காய் வைத்து மூடிப் பூவால் சாத்திச் சத்தியலோக மாகிய நான்முகனின் உறைவிடத்தில் மேருமலையில் ஒரு உரியில் தொங்கவிட வேண்டுமென்று பிரமனுக்குக் கூறினார். பிரமனும் அவ்வாறே செய்தார்.

கலியுக முடிவில் பிரளயம் தோன்றிய போது அமுதக்கலசம் ஒன்றினைப் பிரளயம் தென்புறம் நோக்கி அடித்துச் சென்றது. அப்போது அந்த அமுதக் கலசம் குடந்தை நகரை அடைந்ததும் நகராது நின்றது. அப்போது சிவபெருமான் வேடன் வடிவம் தாங்கி வந்து அம்பைச் செலுத்திக் குடத்தை உடைத்தார். அக்குடத்திலிருந்து அமுதம் வெளிவந்து ஐந்து யோசனை தூரம் பரவியது. குடத்தின் வாய் விழுந்த இடத்தில் ஒரு இலிங்கம் தோன்றியது அந்த இடமே இப்போது குடவாயில் என்னும் சிவத்தலமாகும். குடத்திலிருந்து சிதறிய அமுதத்தை இரு குளங்களாகச் செய்தார். அவையே குடந்தையிலுள்ள மகாமகக் குளம், பொற்றாமரைக் குளம் என்று தலபுராணம் கூறும். இப்பொய்கையைச் சிவனின் ஏவலால் தேவசிற்பி அமைத்தான் என்பதும் புராணம் கூறும் மற்றொரு பழைய செய்தியாகும்.

## மகாமகக் குளத்தின் தொன்மை

கி.பி. ஏழாம் நூற்றாண்டுக்கு முன்பிருந்தே இப்பொய்கை இருந்திருக்க வேண்டுமென்று இலக்கிய வரலாற்று ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். கி.பி. ஆறு-ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த அப்பர் பெருமான் குடந்தைக் கீழ்க்கோட்டத்தைப் பாடும் பொழுது கீழ்க்காணுமாறு பாடியுள்ளார்.

> "தாவி முதல் காவிரிநல் யமுனை கங்கை
> சரசுவதி பொற்றாமரை புட்கரணித் தெண்ணீர்க்
> கோவியொடு குமரிவரு தீர்த்தம் சூழ்ந்த
> குடந்தைக் கீழ்க்கோட்டத்து எம் கூத்தனாரே".

அவ்வாறே சேக்கிழார் பெருமானும்,

> "பூமருவும் கங்கை முதல் புனிதமாம் பெருந்தீர்த்தம்
> மாமகந்தான் ஆடுவதற்கு வந்து வழிபடுங்கோயில்"

என்று பாடியுள்ளார். கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் விசயநகர மன்னர் கிருட்டினதேவராயர் இத்தலத்திற்கு வந்து நீராடியதாக நாகலாபுரம் கல்வெட்டுக் குறிக்கிறது. அச்சுதப்ப நாயக்கன் காலத்திலும், அவன் தளபதி கோவிந்த தீட்சதர் காலத்திலும் இக்குளம் முழுமையான திருப்பணிகளைப் பெற்று விளங்கி வந்துள்ளது. எனவே, இன்று நாம் காணும் மகாமகப் பொய்கையைச் சுற்றியுள்ள சோடச (பதினாறு) லிங்கங்களுக்கு எழுப்பப்பட்டுள்ள சிற்றாலயங்களும், அதனை ஒட்டியுள்ள மண்டபங்களும் கி.பி. 16-17-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவையாகும். ஆதலால், கி. பி. 17-ஆம் நூற்றாண்டிற்குப் பின்னும் ஆங்கிலேயர் காலத்திலும் தொடர்ந்து இக்குளம் பக்தர்களின் பயன்பாட்டில் இருந்து வந்துள்ளதைக் கோயிற் குறிப்புகளும் வருவாய் ஆவணங்களும் உணர்த்துகின்றன.

## மகாமகக் குள அமைப்பு

மகாமகக் குளத்திற்கு மாகஸரோவரம், கன்னியாதீர்த்தம், பஹு தீர்த்தம்,, பாபநாசனி என்று பல்வேறு பெயர்கள் வழங்கப் பெறுகின்றன. இக்குளம் சுமார் 15 ஏக்கர் பரப்பளவில் கிழக்கு மேற்காக நீள் சதுரத்திலும், வடகரையும் தென்கரையும் சிறிது உள் வளைந்து, கிழக்கில் குறுகியும், மேற்கில் அகன்றும் வானிலிருந்து பார்க்க ஏறத்தாழ ஒரு குடம் போலவே காட்சியளிக்கிறது. இக்குளக்கரையின் வடக்கே நான்கும், மேற்கே மூன்றும், கிழக்கே இரண்டும், பிற நாற்கோண திசைகளில் ஒவ்வொன்றுமாக மொத்தம் 16 சிற்றாலயங்கள் அமைந்துள்ளன. இச்சிற்றாலயங்களைச் சோடச லிங்கக் கோயில்கள் என்று அழைப்பர். இச் சிற்றாலயங்களை ஒட்டியுள்ள மேல் முதல் படியில், தீர்த்தங்களின் பெயர்கள், தஞ்சை மராட்டியகால எழுத்தமைதியில், தமிழிலும் தேவநாகரியிலும் எழுதப்பட்டு, தமிழ் எண்களும் பொறிக்கப் பட்டு விளங்குகின்றன்.

இவ்வனைத்துச் சிற்றாலயங்களிலும் கருவறையில் இலிங்கங்கள் தான் மூலதெய்வமாக அமைக்கப்பட்டுள்ளன. அவைகள் முறையே பிரம்ம தீர்த்தேசர், முகுந்தேசர், தனேசர், ரிசபேசர், பாணேசர் , கோணேசர், பத்தியேசர், பைரவேசர், அகத்தீசர், வியாசேசர், உமைபாகேசர், நைருதீசர், பிரம்மீசர், கங்காதரேசர், முக்த தீர்த்தேசர், சேத்திரபாலேசர் ஆகும். ஒவ்வொரு சிற்றாலயமும்

சதுரமான சிறிய கருவறையையும், நான்கு தூண்களைக் கொண்ட முக மண்டபத்தையும் கொண்டு விளங்குகிறது. பிரம்ம தீர்த்தேசர் ஆலய முக மண்டபம் மட்டும் 16 தூண்களைத் தாங்கி நிற்கிறது. மகாமகக் குளத்தைச் சுற்றிலும் 16 படித்துறைகள் உள்ளன. இக் குளத்தின் வடமேற்குக் கோணத்தில் தொடங்கி ஒரு சுற்று முடித்தால் 17 தீர்த்தங்கள் வரும். அவை முறையே வாயு, கங்கை, யமுனை, குபேரா, கோதாவரி, ஈசானி, நர்மதை, இந்திரன், சரசுவதி, கன்னி, காவேரி, நிருதி, கிருஷ்ணை, தேவன், வருணன், சரயு, கன்னி ஆகும். இறுதியில் சொன்ன கன்னியா தீர்த்தமே 66 கோடி தீர்த்தத்திற்கு உரிய பெருமை உடையது. இத்தீர்த்தங்கள் அனைத்தும் புனித நதியின் பெயரிலும், எண்திசைக் காவலர்கள் பெயரிலும் இருப்பது குறிப்பிடத்தக்கது.

மகாமகத்தின் போது பக்தர்கள் குளம் முழுவதும் இறங்கிச் சென்று நீராட வசதியாகக் குளத்தில் இரண்டு அடிக்கு மிகாமல் தண்ணீர் நிரப்பி வைக்கப்படுவது வழக்கம். தண்ணீரைக் குளத்திற்கு கொண்டு வருவதற்கும், வெளியேற்றுவதற்கும் பண்டை நாளில் உள் வழி, வெளிவழி இருந்துள்ளதை அறியமுடிகிறது. காலந் தோறும் செய்து வரும் திருப்பணிகளால் சிற்றாலயங்களும், படித்துறைகளும் சிறப்பாகப் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

## மண்டபங்கள்

கோயில்களுக்கு முன்புறத்தில் உள்ள மண்டபங்களில் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு வகையான தானத்தைப் பற்றிய சிற்பத் தொகுதிகள் செதுக்கப்பட்டுள்ளன. தானங்களில் சிறந்தவை பதினாறு என்று ஆன்றோர் கூறியுள்ளனர். அத்தகைய பதினாறு வகையான தானங்களை இம்மகாமகக் குளக்கரையில் செய்தால் கிடைத்தற்கரிய பலன்கள் கிட்டும் என்று உணர்த்துவதற்காகவே இம்மண்டபங்கள் அமைக்கப் பெற்றிருக்கலாம் என்று கருதலாம். கங்கையில் நீராடி தானங்களை வழங்கினால் எத்தகைய நற்பேறு கிட்டுமோ அத்தகைய நற்பேறு இம்மகாமகக் குளத்தில் நீராடி வழங்கினால் கிட்டும் என்ற நோக்கில் இம்மண்டபங்களும் அதனை யொட்டியக் கோயில்களும் கட்டப்பெற்றிருக்கலாம்.

## ஸ்ரீ பிரம்மதீர்த்தேசுவரர்

இக்கோயில், மகாமகக் குளத்திற்கு வடமேற்குப் பகுதியில் உள்ளது. பிரம்மதீர்த்தேசுவரர் என்பது இங்குள்ள இறைவனின் பெயர். இவ்விறைவன் உறையும் கோயில் சதுரமான கருவறையையும் ஏகதள விமானத்தையும் முன்மண்டபத்தையும் அங்கமாகக் கொண்டு விளங்குகிறது. இறைவன் சந்நிதி மேற்கு நோக்கி உள்ளது. சந்நிதியின் முன் உள்ள 16 கால் மண்டபம் நாயக்கர் காலச் சிற்ப வேலைப்பாடுகளுக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது. இம்மண்டபத்தின் நடுவேயுள்ள மேடையை நான்கு சிற்பத் தூண்கள் தாங்கி நிற்கின்றன. இம்மண்டப விதானத்தில் துலாபாரம் நிறுக்கப்பட்டு தானம் வழங்கும் நிகழ்ச்சி முக்கிய காட்சியாக இடம் பெற்றுள்ளது. எனவே இம்மண்டபம் துலாபார மண்டபம் என்ற பெயரில் அழைக்கப்பட்டு வருகிறது. மன்னன் தராசின் ஒருபுறம் அமர்ந்து கொண்டு மற்றொரு தராசில் எடைக்கு எடை பொன்னை நிறுத்துக் கொடுப்பதும் அதனை அரசர்களும், தேவர்களும் எண்திசைக் காவலர்களும், 12 ராசிகளும், கந்தர்வர்களும் காண்பதாகச் சிற்பம் உள்ளது. விதானத்தின் நடுவே மன்னனையும், தங்கத்தையும் சம எடையில் தாங்கிநிற்கும் கல்தராசு தொங்குவதைக் கண்டு களிக்கலாம். வாளும், கேடயமும் ஏந்தித் தராசிலமர்ந்த நிலையில் அரசனின் உருவம் இடப்புறத்தில் காட்டப்பட்டுள்ளது. வலப்புறத்தில் உள்ள தட்டு அரசனின் நிறைக்கு நிறை பொற்குவியலைத் தாங்கி நிற்கிறது. இத்தராசின் கீழ்த்திசையில் மன்னர்கள் அறுவர் போற்றி நிற்கின்றனர். தராசின் மேல்புறத்தில் கன்னியர் ஐவர் வலக்கையில் தாமரை மலர் ஏந்தி இடக்கையைத் தொங்கவிட்டு நின்ற கோலத்தில் காட்சியளிக்கின்றனர். தராசின் அமைப்பும், தூக்குக் கோலும், தட்டும், சங்கிலியும் கல்லிலே மிக நயமாகச் செதுக்கப்பட்டுள்ளன. தூக்குக் கயிற்றின் நடுவே நான்கு கைகளுடன் அம்மன் அமர்ந்த கோலத்தில் உள்ளாள். தராசில் அமர்ந்து தானம் வழங்கிச் சிறப்பு எய்தியவன் அச்சுதப்ப நாயக்கனாகவோ அல்லது அவனது தளகர்த்தனாகவோ இருத்தல் வேண்டும். இத்துலாபாரக் காட்சியின் வடபுறமும், தென்புறமும் பல்வேறு தெய்வ உருவங்களும் திசைக்காவலர்களும் காட்டப்பட்டுள்ளனர். வாயு, வருணன், அக்கினி, இந்திரன், ஈசானன் முதலிய எண்திசைக் காவலரும் அவரவர்க்குரிய

திசைகளில் உரிய வாகனங்களில் அமர்ந்து காட்சியளிக்கின்றனர். தவிர அன்னத்தின் மீதும், சிம்மத்தின் மீதும், யானையின் மீதும், கிளியின் மீதும், மயிலின் மீதும், யாளியின் மீதும், மானின் மீதும் அமர்ந்த கோலத்தில் தெய்வ உருவங்கள் காட்டப் பட்டுள்ளன. இரு கைகளில் தாமரை ஏந்தி சப்பரத்தில் அமர்ந்த கோலத்தில் சூரியனின் உருவத்தைக் காண்கிறோம். அம்பும் வில்லும் ஏந்தி நிற்கும் பல வீரர்களின் உருவங்களும் இதில் காட்டப்பட்டுள்ளன.

நடுமண்டபத்தின் மேற்கேயுள்ள உத்திரத்தின் உட்புறம் தராசுத் தட்டில் அமர்ந்து தன் எடைக்கு எடை பொன்னை நிறுத்துக் கொடுக்கும் மற்றொரு துலாபார நிகழ்ச்சியும் இடம் பெற்றுள்ளது. இங்கு துலாக்கோலின் வலப்புறத்தில் தொங்கும் தராசுத் தட்டில் கையில் வாளும் கேடயமும் ஏந்தி அமர்ந்துள்ள மற்றொரு மன்னனின் உருவத்தைக் காண்கிறோம். முந்தைய சிற்பத்தை விட உருவில் பெரியதாகவும், வனப்பாகவும் காட்சியளிக்கிறது. இத்துலாக் கோலின் மேல்புறம் விநாயகர், சுப்பிரமணியர் முதலிய தெய்வ உருவங்கள் வரிசையாகக் காட்டப்பட்டுள்ளன. இத்துலாக்கோலும், சங்கிலியும், தட்டும் மிகவும் வேலைப்பாடுமிக்கதாய்த் திகழ்கிறது. இத்துலாபார நிகழ்ச்சியை வலப்புறத்தில் 17 மகளிர் கண்டு களிக்கும் நிலையில் உள்ள சிற்பங்களைக் காண்கிறோம். இம்மகளிர் அனைவரும் வலக்கையில் மலர் ஏந்தி இடக்கையைத் தாழ்கையாகக் கொண்டு நின்ற கோலத்தில் காட்சியளிக்கின்றனர். துலாக் கோலின் இடப்புறத்தில் அதனைக் கவனமாக நிறுக்கும் அதிகாரிகள் இருவர் காட்டப்பட்டுள்ளனர். அடுத்து, நான்கு இடங்களில் மறையவர்கள் அக்னி வளர்ப்பதும் அக்னி குண்டத்தின் முன்பு தெய்வ மகளிர் அமர்ந்த கோலத்தில் தோன்றி அருள்பாலிப்பதுமான சிற்பங்கள் இடம் பெற்றுள்ளன. தொடர்ந்து வடபுறத்தில் அரச குலத்தைச் சார்ந்த 13 ஆண்கள் அத்துலாபார நிகழ்ச்சியை வியந்து போற்றும் நிலையில் சிற்பங்கள் வடிக்கப்பட்டுள்ளதைக் காணலாம். இவ்வாறு மிக நுட்பமாக துலாபார நிகழ்ச்சி நடுமண்டப விதானத்தில் செதுக்கப்பட்டுள்ளது. இச்சிற்பங்கள் அனைத்தும் 17-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த தஞ்சை நாயக்கர் காலத்தவை.

இந்நிகழ்ச்சி துலா புருஷதானத்தைச் சித்திரிக்கிறது. இத் தானம் ஒரு தட்டில் எஜமானன் இருந்து மறு தட்டில் தங்கத்தை

வைத்துச் சமமாகத் தூக்கி அதிலிருந்து, பின் இறங்கி அதிலுள்ள பொன்னின் பாதியை ஆசாரியனுக்கும் மிகுதியை ருத்விகளுக்கும் கொடுத்து, அவர்கள் கட்டளைப்படி மற்றவர்களுக்கும் தானங்களைக் கொடுத்தல் வேண்டும் இப்படிச் செய்தவர். புகழையும் ஆயுளையு மடைந்து விஷ்ணுபதமடைவர்.

இத்துலாபார மண்டபத்தின் நடுவேயுள்ள நான்கு தூண்களும், கால்களையுடைய சிற்பத் தூண்களாக விளங்குகின்றன. இத்தூண்களில் பூதகணம் குடைப் பிடிக்க துள்ளிக் குதிக்கும் மானுக்குத் துளிர் கொடுக்கும் கங்காளமூர்த்தி, கொடிப் பெண், கையில் சாட்டைப் பிடித்து தேவியுடன் தோன்றும் இராஜமன்னார், மழுவும், மானும் ஏந்தி வணங்கி நிற்கும் அதிகார நந்தி, மழுவும் மானும், வில்லும் அம்பும், ஏந்தி நிற்கும் திரிபுராந்தகர், வீணை மீட்டும் வனிதை, அதனைப் போற்றி நிற்கும் இரு அரச குலத்தோர், சந்திரசேகர மூர்த்தி, தனித்து நிற்கும் அதிகார நந்தி, எருமைத் தலை வடிவில் தோன்றும் அசுரனை சம்ஹாரம் செய்யும் மகிசமர்த்தினி, உடுக்கையும், பாசமும், திரிசூலமும் ஏந்தி நிற்கும் பைரவர், மலர் ஏந்தி நிற்கும் அரச மகள், தில்லையில் நடமிடும் எண்தோள் காளி, 18 கைகளுடன் வலது காலை உயர்த்தி தாண்டவமாடும் ஊர்த்துவ தாண்டவர், குடமுழா வாசிக்கும் நந்தி, மத்தளம் கொட்டும் பிரம்மா, இசைக்கேற்ப தாளம் இசைக்கும் நான்முகன், சக்திப்படையும், வச்சிரப் படையும் ஏந்தி அருள் பாலிக்கும் மயில் வாகனன், ஐந்து தலையும் 10 கரங்களும் கொண்டு ஆமை மீது அமர்ந்துள்ள தெய்வ உருவம் ஆகிய பெரிய சிற்பங்கள் இத்தூண்களை அலங்கரிக்கின்றன. கங்கையும், யமுனையும் உடலை ஒய்யாரமாக வளைத்து கொடிப் பெண்ணாக நின்ற கோலத்தில் காட்டப்பட்டுள்ள சிற்பங்களும் காண்போர் கவனத்தை ஈர்க்கவல்லது. இச்சிற்பங்கள் ஒவ்வொன்றும் சராசரி 50 செ.மீ. உயரமுடையவை. தவிர இத்தூண்களின் மேலேயுள்ள இடைக் கட்டுகளில் பல்வேறு சிறிய சிற்ப வடிவங்கள் காட்டப்பட்டுள்ளன. கோலாட்டம் அடித்து குதூகலிக்கும் மகளிர், மத்தளம் கொட்டும் கலைஞன், நட்டுவாங்கன், நாட்டியமாடும் பெண், மயில்வாகனன், இரு அன்னப் பறவைகள், தாமரை ஏந்தி நிற்கும் தாயார், எதிரெதிரே நின்று போர் செய்யும் யாளிகள், தேவியுடன் தோன்றும் உச்சிட்ட கணபதி, சுப்பிரமணியர், கஜலெட்சுமி,

அன்னபூரணி, நர்த்தன கணபதி, மனிதத்தலையும், பறவையின் உடலையும் கொண்டு நாட்டியமாடும் கந்தர்வக் கணங்கள், விநாயகர் முதலிய சிறிய சிற்பங்களும் இத்தூண்களில் இடம் பெற்றுள்ளன. சிற்பங்கள் ஒவ்வொன்றும் 10 செ.மீ உயரமும் 15 செ.மீ அகலமும் உடையவை. இச்சிற்பங்கள் அனைத்தும் நடுமண்டபத்தைத் தாங்கும் நான்கு தூண்களில் இடம் பெற்றுள்ளன.

நடுமண்டபத்தைச் சுற்றியுள்ள ஏனைய 12 தூண்களிலும் பல வகைச் சுவையூட்டும் சிற்ப உருவங்களைக் காண்கிறோம். வாளோடும், கேடயத்தோடும் வந்து சிம்மத்தின் மீது சவாரி செய்யும் போர் வீரர்கள், ஊர்த்துவ தாண்டவமூர்த்தி, அஞ்சலித்து நிற்கும் முனிவர், மயில் வாகனன், அனல் மகுடம் பூண்ட ஆடும் எண்தோள் காளி, இலிங்கத்தை வழிபடும் இடம்புரி விநாயகர், உடலை வளைத்து நிற்கும் பெண், கஜசம்ஹாரமூர்த்தி, உமையின் ஊடலைத் தவிர்க்கும் அண்ணல், அர்த்தநாரி, சண்டேச அனுக்கிரக மூர்த்தி எருமைத் தலை மீது எண் கரங்களுடன் தோன்றும் துர்க்கை, வில்லேந்திய வேலன், வணங்கி நிற்கும் முனிவர், கொடிப்பெண் காலசம்ஹாரமூர்த்தி, வணங்கி நிற்கும் மார்க்கண்டேயன், பிச்சாடனர், தாருகாவனத்தில் பிச்சையேந்தும் பெருமான், தட்டைத் தலையில் ஏந்தி வரும் சிவகணங்கள், அண்ணலின் அழகில் மயங்கி நிற்கும் இரு ரிஷி பத்தினி பெண்டிர், கையில் கோல் ஊன்றி நிற்கும் இடையர், ரிஷப வாகனர், இலிங்கத்தைப் பூசிக்கும் மார்க்கண்டேயன், எருமை மீது அமர்ந்து அவன் மீது கயிற்றை எறியும் எமன், நாகராசன், நடமாடும் கணபதி, இராஜமன்னார், ரிஷபாந்திகர், பத்ரகாளி, அசுரனை அழிக்கும் எண்தோள் காளி, காளை வாகனத்துடன் காட்சி கொடுக்கும் நாயனார், வளைந்த கொடியைப் பிடித்து நிற்கும் கொடிப்பெண், வீணை ஏந்தி நாட்டிய மாடும் பெண், சட்டைநாதர், மழுவும் மானும் ஏந்திய சந்திரசேகரமூர்த்தி, மயிலை மிதித்து நிற்கும் வில்லேந்தியவேலன், சங்கிலி நாச்சியாரோடு தோன்றும் சுந்தரமூர்த்தி நாயனார், நர்த்தனக் கண்ணன், வீராசனத்தில் தோன்றும் தெட்சிணா மூர்த்தி, வாளும் கேடயமும் ஏந்தி நிற்கும் வீரபத்திரர், ஆட்டுத்தலையுடன் அஞ்சலித்து நிற்கும் தக்கன், மீசையை முறுக்கி நிற்கும் குடிமகன், சீறிவரும் சிம்மத்தைக் குறுவாளால் குத்திக் கொல்லும் வீரன், கையில் குத்துக் கட்டை கொண்டு மல்யுத்தம்

செய்யும் இரு மறவர்கள், தாடியோடு நிற்கும் மாமுனிவர் இருவர், வியந்து நிற்கும் மன்னர்கள், செகண்டி அடித்து, மத்தளம் முழங்க மாற்றானை வீழ்த்திக் கொல்லும் மறவன், தோளில் திரிசூலம் தாங்கி உடுக்கையோடு வரும் பிட்சாடனர், துள்ளிக்குதிக்கும் மான், அழகே உருவாய்த் தோன்றும் நங்கை, அவரது கரத்தில் உள்ள மலரைப் பற்றும் பச்சைக் கிளி, அவளது அழகைக் கண்டு வியந்து நிற்கும் மாமுனிவர், நர்த்தனமாடும் இடம்புரி விநாயகர், வள்ளி தேவசேனையுடன் தோன்றும் சுப்பிரமணியர், அன்னத்தின் மீது அமர்ந்து போர் புரியும் ரதி, மண்டியிட்டு அம்பு தொடுக்கும் மன்மதன், வலத் தோளில் வில்லேந்தி நிற்கும் அதிகார நந்தி, மயில் வேட்டையாடும் வேடன், மீசையை முறுக்கிக் குதூகலித்து நிற்கும் குறமகன், தாடி தரித்து நாட்டியமாடும் கோமாளி, வில் எடுத்து அம்பு தொடுக்கும் வீரன், இடக்கையில் உள்ள மோதகத்தைப் பற்றி நிற்கும் யானை முகத்தான், காளை வாகனத்துடன் காட்சியளிக்கும் பெருமான், இலிங்கத்திற்குக் கண்ணை அப்பும் கண்ணப்பர், அக்க மாலையும் கெண்டியும் ஏந்தி யோகம் செய்யும் நான்முகன், நாய் வாகனத்துடன் தோன்றும் பைரவர், அம்பும் வில்லும் ஏந்தி நிற்கும் குறமகன், குழந்தையை இடுப்பில் கொண்டு நிற்கும் குறமகள், குத்துச் சண்டை செய்யும் மறவர்கள், ஒற்றைக் காலில் தவம் செய்யும் அர்ச்சுனன், அர்ச்சுனனுக்குப் பாசுபதம் வழங்கும் வேடன் உருவில் தோன்றும் கிராதன், வில்லைத் தோளில் ஏந்தி வணங்கி நிற்கும் அர்ச்சுனன், எண்தோள்களில் ஆயுதம் ஏந்தி அர்ச்சுனனுக்கு அருள் பாலிக்கும் சிவபிரான் முதலிய சிற்ப உருவங்கள் இங்குள்ள தூண்களில் இடம் பெற்றுள்ளன. இங்குள்ள தூண் சிற்பங்களில் கிராதார்ஜுனிய சிற்பத் தொடர் சிறப்பு வாய்ந்தது எனலாம். தவிர, அதிகாரநந்தியும், மயில் மீது காலை ஊன்றி வில்லேந்தி நிற்கும் வேலனின் சிற்பமும், தில்லைக் காளி, ஊர்த்துவ தாண்டவ மூர்த்தி சிற்பமும் நிறைந்துள்ளன. இச்சிற்பங்கள் தஞ்சை நாயக்கர் காலக் கலைக்குச் சிகரமாக அமைகின்றன. இவற்றை அச்சுதப்ப நாயக்கனின் தளவாய் கோவிந்த தீட்சதரின் காலத்தவையாகக் கருதலாம்.

### ஸ்ரீமுகுந்தேசுவரர்

இச்சிற்றாலயம் மகாமகக் குளத்தின் வடகரையில் பிரம்ம தீச்சுரர் ஆலயத்தை அடுத்து கிழக்காக அமைந்துள்ளது. சதுரமான

கருவறையையும், ஏகதள விமானத்தையும் நான்கு தூண்களைக் கொண்ட முகமண்டபத்தையும் கொண்டு விளங்குகிறது; கருவறையில் உறையும் இறைவன் முகுந்தேசுவரர் என்ற பெயரில் வழங்கப்பெறுகிறார்.

இக்கோயில் அதிட்டானம் முதல் கபோதம் வரை கருங்கல்லாலும், அதன் மேலுள்ள சிகரம் சிமென்ட் கலவையாலும் எழுப்பப்பட்டுள்ளது. நாயக்கர் காலக் கலைப் பாணியில் அதிட்டானத்தை உபபீடம், உபானம், மகாபத்மம், தரங்கைக் குமுதம், கண்டம், கபோதம், உபபீடம், பத்மம், ஜகதி, முப்பட்டைக் குமுதம், கண்டம், பட்டிகை, வேதிகை ஆகிய அங்கங்கள் மாறி மாறி அமைந்து அணி செய்கின்றன. கீழே உள்ள கண்டப் பகுதியில் பல்வகைப் பூத கணங்களும், யாளி, காளை முதலிய விலங்குகளும் சிறப்பாகச் செதுக்கப்பட்டுள்ளன. குள்ளச் சிவகணங்கள் நடந்து செல்வதும், கையைத் தூக்கி வியந்து நிற்பதும், கூரையைத் தாங்கி நிற்பதுமாகச் சிற்பத் தொடர் அமைந்துள்ளது. தென்புறத்தில் காளை ஒன்றைக் கட்டி இழுத்து வரும் சிவகணத்தைக் காண்கிறோம். மற்றொரு இடத்தில் தலையைத் திருப்பிச் சீறி நிற்கும் யாளியையும், சிவ கணத்தையும் காணமுடிகிறது. கைகளைப் பக்கங்களில் நீட்டியும், முத்திரை காட்டியும் குதூகலமாக இச்சிவகணங்கள் காணப்படுகின்றன. குரங்கு முகமும் மனித உடலும் கொண்ட சிவகணத்தின் சிற்பம் ஒன்றையும் இவ்வரிசையில் காணலாம். சந்நிதிக்கு ஏறிச் செல்லும் படிக்கட்டுகளின் பக்கச் சுவரில் தாடியுடன் கூடிய அரசனின் உருவமும், அருகில் அஞ்சலித்து நிற்கும் அரசியின் உருவமும் காணப்படுகின்றன.

முகமண்டபத்தைத் தாங்கி நிற்கும் நான்கு தூண்களும் சிற்பங்கள் செறிந்த தூண்களாகத் திகழ்கின்றன இத்தூண்களின் அடித்தளத்தைக் குத்திட்டு அமர்ந்த சிம்மங்கள் நான்கு தாங்கி நிற்கின்றன. தூண்களின் சதுரப் படைகளில் சிற்பங்கள் பல செதுக்கப்பட்டுள்ளன. கொடிப்பெண், அபயமும் வரதமும் வழங்கி வீற்றிருக்கும் அன்னை, வீணை மீட்டும் வனிதை, கோலை ஊன்றி ஒய்யாரமாக நிற்கும் பெண் அணங்கு, அவள் பாதத்தில் முள் எடுக்கும் பணிப்பெண், அல்லி மலர் ஏந்தி நிற்கும் பெண் தெய்வம் ஆகிய சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன.

இம்மண்டப உத்தரத்தின் பக்கங்களிலும், விதானங்களிலும் தானச் சிற்பங்கள் இடம்பெற்றுள்ளன. அரசன் தானம் கொடுக்க அதனைத் தலையில் சடாமுடி தரித்த அடியவர் பெறுவதும் அவரைத் தொடர்ந்து பல முனிவர்களின் சிற்பங்களும் காட்டப் பட்டுள்ளன. மன்னனின் இடப்புறத்தில் 19 மகளிர் இடக்கையில் மலர் ஏந்தி, வலக்கையைத் தொடையில் வைத்த நிலையில் காட்டப் பட்டுள்ளனர். தானச் சிற்பத்தின் எதிர்புறம் 8 மறையவர்கள் அமர்ந்து தீ மூட்டி யாகம் வளர்க்கின்றனர். யாகத்தின் முன்புறம் கலசத்தின் மீது, சிம்மம், யாளி முதலான வாகனங்களின் மீது தெய்வ உருவங்கள் காட்டப்பட்டுள்ளன. விதானத்தில் எண்திசைக் காவலர்கள், அம்பும் வில்லும் ஏந்திய வீரர்கள், கன்னியர் எழுவர். விநாயகர், சிற்றாலயங்கள் முதலிய சிற்பங்கள் காட்டப்பட்டுள்ளன, இது "திக்பாலதானத்தைக்" குறிப்பதாக இருக்கலாம். இவை கி.பி. 17-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த சிற்பங்களாகத் திகழ்கின்றன.

## ஸ்ரீதனேசுவரர்.

இச்சிற்றாலயமும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள சிற்றாலயத் துக்கு வலப்பக்கத்தில் வடகரையில் அமைந்துள்ளது. சதுரமான கருவறையையும், முகமண்டபத்தையும் உடையது. அதிட்டானம் முதல் கபோதம் வரை கருங்கல் திருப்பணி. மேலேயுள்ள ஏகதள விமானம் சிமென்ட் கலவையால் எழுப்பப்பட்டுள்ளது. கருவறையில் உறையும் இறைவன் தனேசுவரர் என்ற பெயரில் வழங்கப் பெறுகிறார்.

நான்கு தூண்கள் தாங்கும் முகமண்டப உத்திரத்தில் தானச் சிற்பம் இடம் பெற்றுள்ளது. அரசன் தானம் வழங்குவதும், அதனை 15 முனிவர்கள் பெறுவதுமாகச் சிற்பங்கள் அமைந்துள்ளன. முனிவர்கள் தலையில் சடாமுடி தரித்து, மார்பில் அங்கியும் இடையில் ஆடையும் உடுத்தியுள்ளனர். பெரும் பொருளைத் தானம் வழங்கும் அரசனின் வலப்புறம் 16 மகளிர் இடக்கையில் மலர் ஏந்தி வலக்கையைத் தாழ்கையாகக் கொண்டு நின்ற கோலத்தில் காட்சியளிக்கின்றனர். தானம் வழங்கும் சிற்பத்தின் எதிரே ஏழு மறையவர்கள் யாகம் வளர்க்கின்றனர். யாக மண்டபத்தின் முன்புறம் பீடத்தின் மேல் தெய்வ உருவங்கள் எழுந்தருளுவிக்கப்பெற்றுள்ளன. விதானத்தில் வலக்கையில் திரி

சூலம் ஏந்திய நிலையில் நான்கு சிற்பங்கள் அமர்ந்த கோலத்தில் காட்டப்பட்டுள்ளன. யானைமீதும், அன்னத்தின் மீதும், சிம்மத்தின் மீதும், ஆட்டின் மீதும் அமர்ந்து வரும் தெய்வ உருவங்களைக் காணலாம். மேலும் சிற்றாலயங்களும், கணபதி முதலிய உருவங்களும், கன்னியர் எழுவரும், வாளும் கேடயமும் வில்லும் அம்பும் ஏந்தி நிற்கும் வீரர்களும் காணப்படுகின்றனர். இத்தூண்களில் சூரியன், சந்திரன், கொடிப்பெண், சட்டைநாதர், மயில்வாகனர், பிச்சாடனர், பத்தினிப் பெண்டிர், அதிகார நந்தி, சிவன் ஆகிய தெய்வ உருவங்கள் செதுக்கப்பட்டுள்ளன. இம்மண்டபம் கி.பி. 16-17 - ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. இங்குள்ள தானம் வழங்கும் காட்சி எத்தகைய தானத்தைக் குறிக்கிறது என்பதை அறிய இயலவில்லை.

## ஸ்ரீஇடபேசுவரர்

இதுவும் வடகரையில் தனேசுவரர் கோயிலுக்கு வலப்பக்கத்தில் அமைந்துள்ள சிற்றாலயம் ஆகும். கருவறையையும், முக மண்டபத்தையும் உடையது. அதிட்டானம் முதல் கபோதகம் வரை கருங்கல்லாலும், அதன் மேலுள்ள சிகரம் சிமெண்ட் கலவையாலும் எழுப்பப்பட்டுள்ளன.

முகமண்டபத்தின் உத்திரத்தில் தானச் சிற்பங்கள் இடம் பெற்றுள்ளன. அரசன் நான்கு விருட்சங்களை முனிவர்களுக்குத் தானமாக வழங்குகிறான். முதல் விருட்சத்தின் கீழ் பசு ஒன்று நிற்கிறது. விருட்சத்தின் இடப்புறம் 16 முனிவர்கள் அமர்ந்து அதனைப் பெறுகின்றனர். அரசனின் வலப்புறம் 17 மகளிர் இடக்கையில் மலர் ஏந்தி வலக்கையைத் தாழ்கையாகக் கொண்டு நின்ற கோலத்தில் காட்சியளிக்கின்றனர். தானச் சிற்பத்தின் இடப்புறம் எட்டு மறையவர்கள் அமர்ந்து யாகம் வளர்க்கின்றனர். யாகத்தின் முன்புறம் இருகைகளிலும் மலர் ஏந்தி அபய வரதம் அளிக்கும் பெண் தெய்வங்கள் காட்டப்பட்டுள்ளனர். விதானத்தின் நடுவே சூரியன், விநாயகர், திசைக் காவலர்கள், சப்த கன்னியர், வாளும் கேடயமும் ஏந்தி நிற்கும் வீரர்கள், அம்பும் வில்லும் ஏந்தியுள்ள வீரர்கள், சிற்றாலயங்கள், தெய்வ உருவங்கள் ஆகியவை காட்டப்பட்டுள்ளன. ஒரு மூலையில் அமர்ந்த கோலத்தில் திரிசூலம் ஏந்தி 4 தெய்வ உருவங்கள் காணப்படுகின்றன. எண்திசைக்

காவலர்கள் அவர்களுக்குரிய வாகனங்களுடன் காட்டப்பட்டுள்ளனர். இது "கல்பக விருட்சக தானத்தைக்" குறிக்கிறது. இவ்வகைத் தானம் செய்தவன் சித்த, சாரண, கின்னர அப்சரசுகளால் வணங்கப்பட்டுச் சூரிய வருண விமானத்தேறி நூறு கல்பம் பரம பதத்தில் இருப்பான் என்று கூறப்படுகிறது. இவை 17-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த சிற்பங்களாகும்.

## ஸ்ரீபாணேசுவரர்

இடபேசுவரர் கோயிலுக்கு வலப்புறம் வடகிழக்கு மூலையில் உள்ளது. கருவறையையும், முகமண்டபத்தையும் உடையது. இச்சிற்றாலயம் உபானம் முதல் கபோதம் வரை கருங்கல்லாலும், ஏனைய சிகரப்பகுதி சிமெண்ட் கலவையாலும் எழுப்பப்பட்டு வண்ணம் பூசப்பட்டுள்ளது. முகமண்டப உத்தரத்திலும், விதானத்திலும் தானச் சிற்பங்கள் இடம் பெற்றுள்ளன. அரசன் இரண்டு திருக்கைகளுடன் கூடிய இறையுருவை முனிவருக்கு வழங்குவதாக மையச் சிற்பம் அமைகிறது. அரசனின் வலப்புறத்தில் 18 மகளிர் இடக்கையில் மலர் ஏந்தி, வலக்கையை இடையில் கொண்டு நின்ற கோலத்தில் காட்சியளிக்கின்றனர். அரசனின் இடப்புறத்தில் தானம் பெறும் முனிவரும், பிறமுனிவருமாக மொத்தம் 18 உருவங்கள் காட்டப்பட்டுள்ளன. மகளிர் மற்றும் முனிவர்களுக்கு மேல் வரிசையில் ஆனிரைகள் காட்டப் பட்டுள்ளன. தெய்வ உருவினைத் தானமாக வழங்கும் அரசன் 12 பசுக்களையும் தானமாக அளித்துள்ளான் என்று கருத இச்சிற்பம் இடந்தருகிறது. இச்சிற்பத்தை "கனககாமதேனு தானமாகக்" கொள்ளலாம். இத்தானம் செய்தவன் தேவர்களால் பூசிக்கப்பட்டுச் சிவபதம் பெறுவான் என்று நம்பப்படுகிறது.

இக்கோயில் முகமண்டபத் தூண்கள் யாவும் ஏனைய மண்டபங் களை விட அதிகச் சிற்பங்கள் நிறைந்ததாகக் காணப்படுகின்றன. இவை அனைத்தும் கி.பி. 17-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவை.

## ஸ்ரீகோணேசுவரர்

இம்மண்டபம் மகாமகக் குளக் கீழ்க்கரையில் அமைந்துள்ளது. சதுரமான கருவறையையும் எளிய முகமண்டபத்தையும் உடையது. முகமண்டபத்தின் உத்தரங்களிலும் விதானத்திலும் தானச்

சிற்பங்கள் இடம் பெற்றுள்ளன. அரசன் பசுவைத் தானமாகக் அளிக்கும் மையக்காட்சி இம்மண்டபத்தில் இடம் பெற்றுள்ளது. அரசன் அமர்ந்த நிலையில் பசுவின் வாலை உருவி அந்தணனுக்குத் தானம் அளிக்கிறான். அரசனின் இடப்புறம் 18 மகளிர் கையில் மலர் ஏந்தி நின்ற கோலத்தில் காட்சியளிக்கின்றனர். தானம் தரும் அந்தணனின் இடப்புறம் வரிசையாக மறையவர்கள் கூட்டத்தைக் காண்கிறோம். இக்காட்சியின் எதிர்ப்புறம் மறையவர்கள் எண்மர் அமர்ந்து அக்னி குண்டம் எழுப்புகின்றனர். மற்ற மண்டபங்களைப் போல இங்கும் விதானத்தில் தெய்வ உருவங்கள் அமைந்துள்ளன. தெய்வ உருவங்களும், எண்திசைக் காவலரும், வீரர்களும், கன்னியர் எழுவரும், சிறு தெய்வங்களும் காட்டப்பட்டுள்ளனர். இம்மண்டபச் சிற்பங்கள் ''ரத்னதேனு தானத்தைக்'' குறிப்பதாகக் கருதலாம். இவ்வகை தானம் செய்தவன் மன்மதனுக்கீடான ஒளியுடையவனாய்ப் பரம பதமடைவான் என்று கூறப்படுகிறது

இம்மண்டபத்தினை நான்கு சிற்பத் தூண்கள் தாங்கி நிற்கின்றன தூண்களில் பிச்சாடனர், திருமால், துர்க்கை, முப்புரம் எரித்த பெருங் கடவுள், மயில்வாகனர், உமையன்னை, துவார பாலகர், ஒரு தலையும் இரண்டு கைகளும், மூன்று கால்களும் கொண்டு ஆடும் உருவம், சூரியன், சந்திரன் ஆகிய சிற்பங்கள் இடம் பெற்றுள்ளன. இச்சிற்பங்கள் அனைத்தும் தஞ்சை நாயக்கர் காலத்தவை.

## ஸ்ரீகுணேசுவரர்

மகாமகக் குளத்தின் கீழ்க்கரையில் இச்சிற்றாலயம் அமைந்துள்ளது. சதுரமான கருவறையையும் இருதள விமானத்தையும் முக மண்டபத்தையும் கொண்டு விளங்குகிறது. முகமண்டபத்தில் சிற்பங்கள் நிறைந்த நான்கு தூண்கள் காணப்படுகின்றன.

நடுமண்டப உத்தரத்தில் அரசன் குதிரை ஒன்றைத் தானமாக அளிக்கும் காட்சி இடம் பெற்றுள்ளது. இது ''இரண்யாசவ தானத்தைக்'' குறிக்கும் காட்சியாகும். இத்தானத்தைச் செய்தவன் தேவர்களால் பூசிக்கப்பட்டு இந்திரபதம் அடைவான். இச்சிற்பத்தின் வலப்புறம் 19 மகளிர் கையில் மலர் ஏந்தி நின்ற கோலத்தில் காட்சியளிக்க, இடப்புறத்தில் தானம் பெறுபவரும் மற்றவருமாக 18 மறையவர்

களையொத்த ஆண் உருவங்கள் அத்தானத்தை வலக்கை நீட்டிப் பெறுகின்றனர். மைய மண்டபத்தின் விதானத்தின் நடுவே சிற்றால யங்களும், தேரைச் சுற்றிலும் பல்வகை வாகனங்கள் மீது அமர்ந்து வரும் தெய்வ உருவங்களும், வில்லும் அம்பும் ஏந்தி நிற்கும் வீரர்களும், கன்னியர் எழுவரும், எண்திசைக் காவலரும் காட்டப் பட்டுள்ளனர். இச்சிற்பங்கள் அனைத்தும் புடைச் சிற்பங்களாக விளங்குகின்றன.

## ஸ்ரீ பைரவேசுவரர்

இச்சிற்றாலயம் மகாமகக் குளத்தின் தென் கிழக்கு மூலையில் இடம்பெற்றுள்ளது. சதுரமான கருவறையையும் நான்கு தூண்களைக் கொண்ட முகமண்டபத்தையும் உடையது. கருவறையின் முன் உள்ள முகமண்டபத்தை நான்கு சிற்பத் தூண்கள் தாங்கி நிற்கின்றன. முகமண்டப உத்தரங்களிலும், விதானத்திலும் தானச் சிற்பங்கள் இடம்பெற்றுள்ளன. இங்குக் குதிரை பூட்டிய தேரினை அரசன் தான்ம் வழங்குவதாகச் சிற்பம் அமைகிறது. இதுவும் 'இரண் யாசவதானத்தைக்' குறிக்கிறது.. இவ்வகை தானம் செய்தவன் பாவம் நீங்கி ஒளியுடைய உடலுடையவனாய்ச் சிவபதமடைவான். வேலைப் பாடு மிக்க தேரின் நடுவே இலிங்க வடிவம் காட்டப்பட்டுள்ளது. தானம் வழங்கும் அரசனின் வலப்புறம் 15 மகளிர் கையில் மலர்க் கொத்துடன் காட்டப்பட்டுள்ளனர். தானத்தைப் பெறும் மறைய வனின் இடப்புறம் 16 ஆண் உருவங்கள் வலக்கை நீட்டித் தானம் பெறும் நிலையில் அமர்ந்த கோலத்தில் காட்டப்பட்டுள்ளனர். இவர்களது தலையில் மகுடத்தை ஒத்த தலைப்பாகையும், மார்பில் அங்கியும், இடையில் ஆடையும் அலங்கரிக்கின்றன. நடுமண்டப விதானத்தில் எண்திசைக் காவலர்களும் கன்னியர் எழுவரும், ராசிக் கூட்டங்களும், வீரர்களும், சிறு தெய்வங்களும் காட்டப்பட்டுள்ளன. இம்மண்டபம் கி.பி. 17-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது.

## ஸ்ரீஅகத்தீசுவரர்

இது மகாமகக் குளத்தின் தென்கரையில் அமைந்துள்ளது. சிறிய கருவறையும் 4 தூண்கள் தாங்கும் முகமண்டபமும் உடையது. முகமண்டப விதானத்திலும் உத்தரத்தின் பக்கங்களிலும் தானச் சிற்பங்கள் இடம்பெற்றுள்ளன. தென் திசையிலுள்ள உத்தரத்தில்

தெய்வ உருவங்கள் வீற்றிருக்கும் மலர்த்தேர் ஒன்றை அரசன் தானமாக அளிக்கின்ற சிற்பமும், அதனை 6 ஆண் உருவங்கள் அமர்ந்த கோலத்தில் கைகளை நீட்டிப் பெறுவது போலவும், மற்றும் 12 ஆண் உருவங்கள் நின்ற கோலத்திலும் காட்டப்பட்டுள்ளனர். இத்தானத்துக்கு 'ஹேமஹஸ்திரதானம்' என்று பெயர். இத்தானம் செய்தவன் வித்தியாதரரால் பூசிக்கப்பட்டுச் சிவபதம் அடைவான். தானம் அளிக்கும் அரசனின் இடப்புறம் 20 பெண்கள் கையில் மலர் ஏந்தி நின்ற கோலத்தில் காட்டப்பட்டுள்ளனர். எதிரே மறையவர்கள் எண்மர் அக்னி எழுப்பி யாகம் செய்கின்றனர். வேள்வித்தீயிற்கெதிரே இஷ்ட தேவதை நான்கு கைகளுடன் அமர்ந்த கோலத்தில் காட்டப்பட்டுள்ளது. விதானத்தின் நடுவே எண்திசைக் காவலர்கள், சப்தமாதர், வாளும் கேடயமும் ஏந்தி நிற்கும் வீரர்கள், சிற்றாலயங்களிலும் சப்பரங்களிலும் தோன்றும் தெய்வ உருவங்கள், ஆடு, காளை, யானை, சிம்மம், அன்னம், மயில் ஆகிய வாகனங்களில் அமர்ந்து வழிபடும் தெய்வ உருவங்கள், விநாயகர் முதலியோர் இடம்பெற்றுள்ளனர்.

## ஸ்ரீவியாசேசுவரர்

மகாமகக் குளத்தின் தென் கரையில் இச்சிற்றாலயம் அமைந்துள்ளது. சதுரமான கருவறையையும் எளிமையான முகமண்டபத்தையும் உடையது. முகமண்டபத்தின் விதானத்தில் தானச் சிற்பங்கள் இடம் பெற்றுள்ளன. கூட்டமாக எண்ணிறந்த பசுக்களை அரசன் தானமாக வழங்குவதை இச்சிற்பம் காட்டுகிறது. இதையும் 'கோசஹஸ்திர' தானத்தைக் குறிப்பதாகவே கொள்ளலாம். அரசனின் வலப்புறம் தானத்தைப் பெறுபவனும், அதனைத் தொடர்ந்து 24 மறையவர்களும் கைகளை நீட்டித் தானத்தைப் பெறுவதாகச் சிற்பத் தொடர் அமைந்துள்ளது. அரசனின் இடப்புறம் 26 மகளிர் கைகளில் மலர் ஏந்தி இடக்கரங்களைத் தொங்கவிட்டும், தொடைமீது கொண்டும் நின்ற கோலத்தில் காட்டப்பட்டுள்ளனர். தானம் வழங்கும் சிற்பத்தின் எதிரே மறையவர்கள் எண்மர் அமர்ந்து கைகளில் கரண்டி ஏந்தி நெய் வார்த்து, தீ வளர்க்கின்றனர். அக்னி குண்டத்தின் எதிரே தனித் தனியாக அமர்ந்த கோலத்தில் பெண் தெய்வங்கள் நான்கினைக் காண்கிறோம். விதானத்தின் நடுவே திசைக் காவலர்கள், கன்னியர் எழுவர், வில்லும் அம்பும் ஏந்தி நிற்கும் வீரர்கள், தெய்வ உருவங்கள்,

சிற்றாலயங்கள், மீனம், விருச்சிகம் முதலிய ராசிகள் ஆகியவை காட்டப்பட்டுள்ளன. இங்குள்ள விதானச் சிற்பங்கள் அனைத்தும் ஸ்ரீஉமா பாகேச்சுரர் சிற்றாலயச் சிற்பங்களை ஒத்துள்ளன. இம் மண்டபத்தின் நான்கு தூண்களிலும் பல்வேறு சிற்பங்கள் மிக நுண்ணிய வேலைப்பாடுகளுடன் செதுக்கப்பட்டுள்ளன.

## ஸ்ரீஉமா பாகேசுவரர்

மகாமகக் குளத்தின் தென் கரையில் இச்சிற்றாலயம் அமைந்துள்ளது. இது சதுரமான கருவறையையும். நான்கு தூண்களுடன் கூடிய முகமண்டபத்தையும் உடையது. முகமண்டப விதானத்திலும் உத்தரத்தின் பக்கங்களிலும் தானச் சிற்பங்கள் முழுமையாக இடம் பெற்றுள்ளன. தென் திசையில் உள்ள உத்தரத்தில் அரசன் தானத்தை வழங்குவதும், அவன் வலப்புறத்தில் 24 ஆண் உருவங்கள் அமர்ந்த கோலத்தில் தானத்தைப் பெறுவது மாகச் சிற்பத் தொடர் அமைகிறது. தானம் வழங்கும் அரசனின் இடப்புறம் 17 கன்னியர்கள் கையில் தாமரை மலர் ஏந்தி நின்ற கோலத்தில் காட்சியளிக்கின்றனர். மையச் சிற்பத்தின் எதிரே நான்கு இடங்களில் அக்னி வளர்க்கும் நிலையில் 10 மறையவர்கள் காட்டப்பட்டுள்ளனர். அவர்களுக்கு முன்புறம் மூன்று இடங்களில் அமர்ந்த கோலத்தில் தாமரை மலர் ஏந்தி அபயவரதம் காட்டும் பெண் தெய்வங்களைக் காண்கிறோம். இது 'கனககல்பலதிகத்' தானத்தைக் குறிக்கிறதோ என்ற ஐயம் எழுகிறது.

இம்மண்டபத் தூண்களில் பல பெரிய சிற்பங்கள் இடம் பெற்றுள்ளன. உடுக்கையும் அனலும் ஏந்தி முயலகன் மீது ஆடும் பெருமான், குள்ளச் சிறுகணங்கள் குடைபிடிக்கத் தட்டைத் தலையில் தாங்கும் சிவகணம் முன் செல்ல, உடுக்கை அடித்து நடந்து வரும் கங்காளமூர்த்தி, மழுவும் மானும் ஏந்தி அபய-வரதம் காட்டும் சந்திரசேகரர், பைரவர், மயிலின் முன் தோன்றும் சுப்பிரமணியர், வாளும் கேடயமும் ஏந்தி இரு கைகளுடன் வீரபத்திரர், நடராசர், அருகில் அன்னை சிவகாமி, ஆனை முகத்தான், காளை வாகனத்தின் மீது சாய்ந்த வண்ணம் சிவபெருமான், கிழக்கு நோக்கிய ஆதவன், திரிபுராந்தகர், வலத் தோளில் மழுவை ஏந்தி வணங்கி நிற்கும் சண்டிகேசுவரர், அமர்ந்துள்ள சண்டிக்குப் பதம் அளிக்கும் சண்டேச அனுக்கிரக மூர்த்தி, உமையின் ஊடலைத் தவிர்த்து நிற்கும் சிவ பெருமான் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்.

## ஸ்ரீநைருதீசுவரர்

மகாமகக் குளத்தின் தென்மேற்கு மூலையில் இச்சிற்றாலயம் அமைந்துள்ளது. சதுரமான கருவறையையும், முகமண்டபத்தையும் உடையது. முகமண்டப விதானத்தில் தானம் தொடர்பான சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. இருப்பினும் எவ்வகைத் தானம் வழங்கப்பட்டது என்று அறிய இயலவில்லை. காரணம் அதற்குரிய மையச் சிற்பம் இங்கு இடம் பெறவில்லை. இருப்பினும் தானக் காட்சியின் இருபுறமும் உள்ளோரின் வடிவங்கள் பிற மண்டபங் களைப் போலவே இங்கும் இடம் பெறுகிறது.

இம்மண்டபத்தைத் தாங்கி நிற்கும் நான்கு தூண்களிலும் சிவனது பல்வேறு சிற்ப வடிவங்களைக் காண்கிறோம். சட்டை நாதர், உமையன்னை, இடம்புரி விநாயகர், தாருகாவனத்தில் பிச்சைபுகும் பெருமான், ரிஷபாந்திகர், சண்டிகேசுவரர், வீரபத் திரர், உமையன்னை, இலிங்கத்தை வழிபடும் மார்க்கண்டேயர், சந்திரசேகரமூர்த்தி ஆகிய சிற்பங்கள் முதல் தூணில் இடம்பெற் றுள்ளன. இரண்டாவது தூணில் அழகிய கொடிப்பெண், சடை முடியுடனும் தாடியுடனும் நிற்கும் அகத்திய முனிவர், வேலன் சூரியன், இந்திரன், அதிகார நந்தி, இடம்புரி விநாயகர் ஆகிய சிற்பங்கள் இடம்பெற்றுள்ளன.

மூன்றாவது தூணில் ஆடவல்லான், ரிஷபாந்திகர், அதிகார நந்தி, திரிபுரசம்ஹாரமூர்த்தி, அடியார் ஒருவர், சந்திரசேகர மூர்த்தி ஆகிய சிற்பங்கள் இடம் பெற்றுள்ளன.

நான்காவது தூணில் வராகமும் அன்னமும், அண்ணலின் அடியும் முடியும் தேடும் நிலையில் செதுக்கப்பட்டுள்ளன. அருணாசல மூர்த்தி, யோகதட்சிணாமூர்த்தி, சரசுவதி, கஜசம்ஹாரமூர்த்தி, பிச்சைப்புகும் பெருமான், இடம்புரி விநாயகர், சட்டை நாதர், மயில்வாகனர் ஆகிய சிற்பங்கள் இடம் பெற்றுள்ளன. இவை அனைத்தும் கி.பி. 16-17 ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவை.

## ஸ்ரீபிரம்மேசுவரர்

மகாமகக் குளத்தின் மேற்குக் கரையிலுள்ள இச்சிற்றாலயம் சிறிய கருவறையையும், முகமண்டபத்தையும் உடையது. கருவறை

மேல் ஏகதள விமானம் அலங்கரிக்கிறது. முகமண்டபத்தின் மேல் விதானங்களிலும் உத்தரத்தின் பக்கங்களிலும் தானச் சிற்பங்கள் இடம் பெற்றுள்ளன. அரசன் மரங்களைத் தானம் வழங்குவது போன்று ஒன்பது சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. மரங்களின் ஒருபுறம் வழங்கும் அரசனின் உருவமும், மறுபுறம் தானத்தைப் பெற்றுக் கொள்ளும் இருவரது உருவங்களும் காட்டப்பட்டுள்ளன. மரங்களின் கீழ் எட்டு பெண் தெய்வங்களின் உருவங்கள் இடம் பெற்றுள்ளன. அவர்களில் சிலர் வாகனங்களின் மீது அமர்ந்த கோலத்தில் காட்சி தருகின்றனர். தானச் சிற்பத்தின் வல, இடப் புறங்களில் வழக்கமான பிற மண்டபத்திலுள்ளவை போன்ற காட்சிகள் இடம் பெறுகின்றன. இச்சிற்பத் தொகுதியும் 'கல்ப விருஷதானத்தையே' குறிப்பதாகக் கொள்ளலாம்.

இம்முக மண்டபத் தூண்களில் பல எழில் வாய்ந்த நாயக்கர் காலச் சிற்பங்கள் இடம்பெற்றுள்ளன. அவற்றில் பைரவர், காளி, ஊர்த்துவ தாண்டவமூர்த்தி, இலிங்கோத்பவ மூர்த்தி, அதிகார நந்தி, சண்டிகேசுவரர், பிரம்மா, வேலன், கஜசம்ஹாரமூர்த்தி, வீரபத்திர மூர்த்தி, சங்கர நாராயணன், பிச்சாடன மூர்த்தி, தட்சிணா மூர்த்தி, சுகாசன மூர்த்தி, சிவனையும், உமையையும் வணங்கி நிற்கும் விநாயகப் பெருமான், கால திரிபுரசம்ஹாரர், சண்டேச அனுக்கிரக மூர்த்தி, உமாசகித மூர்த்தி, கல்யாண சுந்தர மூர்த்தி, காமதகன மூர்த்தி, யோகத்தைக் கலைக்க மலரால் அம்பு தொடுக்கும் காமன் ஆகியோரது உருவங்கள் இம்முகமண்டபத் தூண்களை அலங்கரிக்கின்றன. இச்சிற்பங்கள் தஞ்சை நாயக்கர் சிற்பங்களுக்கு எடுத்துக்காட்டாகத் திகழ்கின்றன.

## ஸ்ரீகங்கேசுவரர்

இச்சிற்றாலயம் மகாமகக் குளத்தின் மேற்குத் திசையில் கீழ்த்திசை நோக்கி அமைந்துள்ளது. இது சதுரமான கருவறையையும், நான்கு தூண்களைத் தாங்கும் முக மண்டபத்தையும் கொண்டுள்ளது. முகமண்டப விதானத்தில் தானம் வழங்கும் நிலையிலுள்ள சிற்பங்கள் காட்டப்பட்டுள்ளன. அரச உருவம் ஒன்று அமர்ந்து தானம் வழங்குவதும் மற்றொரு உருவம் கை நீட்டி அத்தானத்தைப் பெறுவதுமாக மையச் சிற்பம் அமைகிறது. தானம் வழங்குவோரின் மேல் புறம் நான்முகனும், நான்முகனது வாகனமான அன்னமும் தெளி

வாகக் காட்டப்பட்டுள்ளன. மைய சிற்பத்தின் வலப்புறம் வரிசை யாக 18 கன்னியர்களின் தோற்றத்தைக் காணலாம். இவர்கள் முறையே வலக் கையைத் தாழ்கையாகக் கொண்டு, இடக் கையில் தாமரை மலரைப் பற்றிய நிலையில் நின்ற கோலத்தில் காட்சியளிக் கின்றனர். வலப்புறம் சாய்த்துக் கொண்டையிட்டுள்ள தலைக் கோலம் நாயக்கர் காலச் சிற்பங்களை நினைவூட்டுகின்றன. தானம் வழங்கும் மையச் சிற்பத்தின் இடப்புறம் 18 ஆண் உருவங்கள் வலக் கையால் வரத முத்திரை காட்டி அமர்ந்த கோலத்தில் காட்சியளிக் கின்றன. விதானத்தில் 12 ராசிகளும், எண்திசைக் காவலர்களும் காட்டப்பட்டுள்ளனர். எத்தயை தானத்தை இச்சிற்பம் குறிக்கிறது என்பதை அறிய இயலவில்லை.

## ஸ்ரீமுக்தேசுவரர்

இது இக்குளத்தின் மேற்குக் கரையில் கீழ் நோக்கி அமைந் துள்ளது. சதுரமான கருவறையை உடைய இச்சிற்றாலயம் ஏகதள விமானத்துடன் திகழ்கிறது. கருவறையின் முன்புறம் உள்ள மண்டபத்தை நான்கு சித்திரத் தூண்கள் தாங்கி நிற்கின்றன. இத்தூண்களில் நான்முகன், கொடிப் பெண்கள் மூவர், விநாயகப் பெருமான் ஆகியோரின் சிற்பங்கள் இடம் பெற்றுள்ளன. இவை தஞ்சை நாயக்கர் காலச் சிற்பக்கலையை வெளிப்படுத்துவன.

. முகமண்டபத்தின் மேலுள்ள விமானத்தில் அரசன் பசுவைத் தானமாகக் கொடுக்கும் நிகழ்ச்சியும், அந்நிகழ்ச்சியை மையமாகக் கொண்டு அந்தணர்களும் அரச குலத்தோரும், மகளிரும் தோன்றும் காட்சியும் புடைச் சிற்பமாகச் செதுக்கப்பட்டுள்ளது. ஆண் மகன் ஒருவன் அமர்ந்த நிலையில் பசுவின் வாலைப் பற்றி உருவிக் கோ தானம் அளிக்கும் காட்சி மிகச் சிறப்பாக உள்ளது. இக்காட்சி ''கனக காமதேனு'' தானத்தைக் குறிப்பதாகக் கொள்ளலாம்.

## ஸ்ரீக்ஷத்திர பாலேசுவரர்

இக்கோயில் மகாமகக் குளத்தின் வடமேற்கு மூலையில் அமைந் துள்ளது. இது சதுரமான கருவறையையும், நான்கு தூண்கள் தாங்கி நிற்கும் முக மண்டபத்தையும் உடையது. முகமண்டபத்தை நான்கு சிற்பத் தூண்கள் அலங்கரிக்கின்றன. இச்சிற்பத் தூண்களின் கீழே நான்கு குந்து சிம்மங்கள் காட்டப்பட்டுள்ளன. இங்குள்ள

தூண்களில் பெரும்பாலும் பைரவர், சட்டைநாதரின் பல்வகை வடிவங்கள் செதுக்கப்பட்டுள்ளன. இம்மண்டப விதானத்தின் பக்கங்களில் உள்ள சிற்பங்கள் உற்று நோக்கத்தக்கன. பெரிய கலசத்தை நடுவே வைத்து இருவர் பூசை செய்ய அவரது வலப் புறத்தில் 18 மகளிர் கையில் மலர் ஏந்தி நிற்பதும், இடப்புறத்தில் 18 மறையோர்கள் வியந்து போற்றுவதும், அபய முத்திரைகாட்டி அமர்ந்த கோலத்தில் காட்சியளிப்பதும் நேரில் காணத் தக்கவை. எதிரே மறையவர்கள் நான்கு இடங்களில் அக்னி வளர்க்கும் நிகழ்ச்சி காட்டப்பட்டுள்ளது. இது 'இரண்யகர்ப்ப தானத்தைக்' குறிப்ப தாகக் கருதலாம். இத்தானம் செய்தவன் நூறு கோடி கல்பம் பிரம்மலோகத்தில் வசித்துத் தனது பித்ருக்களை நரகத்தி லிருந்து மீட்பான். கி.பி. 16-17 ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டு ஒன்றும் இங்கு உள்ளது.

### நவகன்னியர் மண்டபம்

மகாமகக் குளத்தின் வடகரையில் முக்தேசுவரரை அடுத்து நதித் தலைவிகளுக்கு எடுக்கப்பட்ட மண்டபத்தைக் காண்கிறோம் இம் மண்டபம் குடந்தைக் காரோகணம் என்று புகழ் பெற்ற காசி விசுவநாதசுவாமி கோயிலின் தென் திசையில் அமைந்துள்ளது. காசி விசுவநாதசுவாமி கோயிலில் உள்ள நவகன்னியர்கள் மகாமகக் குளத்தில் புனித நீராடும் வகையில் இந்நினைவு மண்டபம் எழுப்பப் பட்டுள்ளது. இம்மண்டபம் நான்கு சதுரத் தூண்களையும் ஒரு படித்துறையையும் உடையது. இது குறித்துக் காசி விசுவநாதர் கோயில் என்ற தலைப்பில் விரிவாகக் காணலாம். ★

---

## கும்பகோணத்தில் காகிதப்பட்டறை

தஞ்சை மராட்டிய மன்னர்களின் ஆட்சிக் காலத்தில் பனை யோலையில் எழுதுவது குறைந்து காகிதங்களில் எழுதுவது அதிகரிக்கத் தொடங்கியதைத் தொடர்ந்து காகிதத் தயாரிப்பிற்கு மிகுந்த தேவை உண்டாயிற்று. இதனால் கும்பகோணம், மன்னார்குடி, பந்தநல்லூர், திருக்காட்டுப்பள்ளி, திருவாரூர் ஆகிய பல இடங்களில் காகிதங்கள் தயாரிக்கப்பட்டு சர்க்காருக்கும், கும்பினிக்கும் அனுப்பியிருக்கின்றனர். ●

# கும்பகோணத்துக் கோயில்கள்

## ஆதிகும்பேசுவரர் கோயில்

இக்கோயிற் கருவறை சதுரவடிவுடையது. கருவறையில் உள்ள மூல லிங்கம் ஆதிகும்பேசுவரர் என்ற பெயரில் வழிபாட்டில் உள்ளது. இக்கோயிலில் காமிகாகம முறைப்படி நித்தம் ஆறு காலப் பூசை நடைபெறுகிறது.

### அர்த்தமண்டபம்

கருவறை முன் உள்ள அர்த்த மண்டபம் தூண்கள் இன்றி எளிமையான அமைப்புடையது. தென் திசையிலும், வட திசையிலுமாக இரு துவார பாலகர் சிலைகள் வாயிலைக் காத்து நிற்கின்றன. 123 செ. மீ. அகலம், 64 செ. மீ. உயரமுடைய இவை பிற்காலச் சோழர் காலக் கலையை வெளிப்படுத்துகின்றன.

### மகாமண்டபம்

அர்த்தமண்டபத்தின் முன்புறம் உள்ள மகாமண்டபம் நீள் சதுர வடிவில் காணப்படுகிறது. இம்மண்டபத்தை வரிசைக்கு மூன்று தூண்கள் வீதம் இரண்டு வரிசைகளில் ஆறு தூண்கள் தாங்கி நிற்கின்றன. இத்தூண்களின் மேல் இருதலைப் போதிகையும் முத்தலைப் போதிகையும் அலங்கரிக்கின்றன. போதிகையின் பக்கங்களில் மத்தளத்தின் இசைக்கேற்ப சதுர நாட்டியமாடும் பெண்களும், பாயும் சிம்மமும், சுற்றிலும் குழந்தைக்கு விளையாட்டு காட்டும் இரு பணிப் பெண்களுமாகச் சில சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. இத்தூண்கள் பிந்திய சோழர் காலக் கலைப் பாணியில் அமைந்துள்ளன. மகாமண்டபத்தின் தென்மேற்கு மூலையிலுள்ள மேடை மீது ஆறு கால கணபதி என வழங்கப்பெறும் இடம்புரி விநாயகரின் நின்ற கோலச் சிற்பம் காணப்படுகிறது. இவ்வுருவம் கி.பி. 16-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது.

## சோமாஸ்கந்தர் சந்நிதி

மகாமண்டபத்தின் தென்புறம் சோமாஸ்கந்தருக்கென்று தனிச் சந்நிதியும், அர்த்த-முகமண்டபங்களும் அமைக்கப்பட்டுள்ளன.

சோமாஸ்கந்தர் சந்நிதியில் அம்மை அப்பராகத் தோன்றும் சிவனும் உமையும், இருவருக்கும் நடுவே தாமரை மலரேந்தி நிற்கும் குகனும், அருகில் தனித்து நிற்கும் தனி அம்மனும் அழகிய செப்புச் சிலைகளாக அமைந்து வழிபாட்டில் உள்ளன. இச்செப்புப் படிமங்கள் பிற்காலச் சோழர் காலத்தவை. சோமாஸ்கந்தரின் படிமம் கி.பி. 12-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. இச்சந்நிதியில் முன்புறம் சிறிய அர்த்தமண்டபமும் அதன் முன்புறம் நான்கு தூண்களைக் கொண்ட முகமண்டப மேடையும் அலங்கரிக்கின்றன.

### சுவாமி சந்நிதி முகமண்டபம்

மகாமண்டபத்தின் முன்புறமுள்ள சதுர வடிவுடைய முகமண்டபத்தின் தென்மேற்கு மூலையில் ஸ்ரீசபை விநாயகருக்கும், வடமேற்கு மூலையில் ஸ்ரீகாசி விசுவநாதருக்கும் தனியாகச் சிறு மண்டபங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

### ஆடவல்லான்—சிவகாமி

இம்மண்டபத்தின் வடதிசையில் ஆடவல்லானுக்குத் தனிச் சபை உள்ளது. இங்குள்ள மேடை மீது ஆடவல்லானும், அருகில் அன்னை சிவகாமியும் செப்பு வடிவில் தென்திசை நோக்கிக் காட்சி தருகின்றனர். இங்குள்ள ஆடவல்லான் உருவம் கி.பி. 10-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. முந்திய சோழர் கலைக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகத் திகழ்வது. ஆடவல்லானின் கூத்தை அமைதியோடு கண்டுகளிக்கும் சிவகாமியின் உருவம் இடப்புறத்தில் தாமரை இருக்கை மீது நின்ற கோலத்தில் காட்டப்பட்டுள்ளது. அன்னை தன் வலக்கை கடக முத்திரையிலும், இடக்கை தொங்கும் கரமாகவு மிருக்க இடையை வலப்புறமாக ஒடித்துத் திரிபங்கியாக நின்ற கோலத்தில் காட்சியளிக்கின்றாள். இச்சந்நிதி தென்திசை நோக்கி அமைந்து உள்ளது. முற்காலச் சோழர் காலத்திய ஆடவல்லானுக்கு நாயக்கர் காலத்தில் முக மண்டபம் எழுப்பித்துள்ளனர்.

### மங்களாம்பிகை சந்நிதி

சுவாமி சந்நிதிக்கு வடபுறம் முதல் திருச்சுற்றில் இத்தலத்துக் காமகோட்ட நாச்சியாரான ஸ்ரீமங்களாம்பிகை சந்நிதி அமைந்துள்ளது. சிறு கருவறை, அர்த்த மண்டபம், விமானம், சிகரம், முக மண்டபம் ஆகிய பகுதியுடன் கீழ்த்திசை நோக்கி அமைந்துள்ளது.

கருவறையின் நடுவே தாமரை பீடத்தின் மீது நான்கு கைகளுடன் நின்ற கோலத்தில் காட்சியளிக்கின்ற இவ்வம்மை மந்திர பீடேஸ்வரி, மங்களாம்பிகை என்ற பெயர்களால் அழைக்கப் பெறுகிறார். திங்கள் தோறும் பௌர்ணமி நாளிலும், புரட்டாசித் திங்களில் நவராத்திரிப் பெருவிழாவின் போதும், மாசி மகத்தின் போதும், ஆடி, தை வெள்ளிக் கிழமைகளிலும் அம்மைக்குச் சிறப்பு வழிபாடு நடைபெறுகிறது.

## முகமண்டபம்

முகமண்டபத்தின் முன்புறம் நந்தியும் பலிபீடமும் மேடை மீது அமைக்கப்பட்டு உள்ளன. முகமண்டபத்தை வரிசைக்கு 7 தூண்கள் வீதம் இரு வரிசைகளில் 14 தூண்கள் அலங்கரிக்கின்றன. இவற்றில் 8 தூண்களில் துதி யாளிகள் பாயும் நிலையில் காட்டப் பட்டுள்ளன. சீற்றத்தோடு தோன்றும் யாளியின் வாயிலிருந்து வளைந்து செல்லும் கொடிக் கருக்குகள் வேலைப்பாடு மிக்கவை. ஏனைய 6 தூண்கள் யாளி இன்றி வேறுபட்ட சிற்ப வேலைப் பாடுகள் கொண்டவை. அடுத்து உள்ள தூண் ஒன்றில் யாளி மீது வலக்காலை ஊன்றி, கால்களில் பாதரட்சையணிந்து இரு கைகளுடன் ஒயிலாக நிற்கும் கொடிப் பெண்ணின் உருவத்தைக் காணலாம். இப்பெண் எதிரே உள்ள மற்றொரு தூணில் இரு கைகளுடன் கூடிய எழில் வாய்ந்த நங்கையின் தோற்றத்தைக் காணலாம். எழில் வாய்ந்த இச்சிற்பத் தூண்கள் அனைத்தும் தஞ்சை நாயக்கர் காலத்தவை. ஒவ்வொன்றும் 3.5 மீட்டர் உயரமுடையவை. இத் தூண்கள் மீது குந்துசிம்மங்களும், பூமுறைகளும், கல்வளையங்களும் அலங்கரிக்கக் காண்கிறோம்.

## முதல் திருச்சுற்று


முதல் திருச்சுற்றில் மகாமண்டபத்தின் வடதிசையில் சண்டி கேசுவரரின் சிற்றாலயம் அமைந்துள்ளது. திருச்சுற்று முழுவதும் முறையாகத் திருச்சுற்று மாளிகை எழுப்பப்பட்டுள்ளது. திருச்சுற்று மாளிகையின் கீழ்த்திசையில் 63 நாயன்மார்களுக்கும் தொகையடியார் ஒன்பதின்மருக்குமாக 72 செப்புச் சிலைகள் வார்த்து வைக்கப்பட் டுள்ளன. இவை அனைத்தும் பணிந்து நின்று வணங்கும் கோலத்தில்

காணப்படுகின்றன. இம்மண்டபம் அறுபத்து மூவர் மண்டபம் என்ற பெயரில் வழங்கப்பெறுகிறது. இம்மண்டபத்தில் அதிகார நந்தியின் செப்பு வடிவம் ஒன்றும், திருச்சுற்றில் தென்மேற்கு மூலையில் வலஞ்சுழி விநாயகர் உருவம் நான்கு கரங்களுடன் அமர்ந்த கோலத்திலும் காணப்படுகின்றன. இவ்வுருவம் பிற்காலச் சோழர் காலமான கி.பி. 12, 13-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது.

வலஞ்சுழி விநாயகரை அடுத்து, பிச்சாடன மூர்த்தி, சுப்பிரமணியர், வள்ளி தெய்வானை, ஆறுமுகப்பெருமான் வள்ளி தெய்வானை ஆகியோர் செப்புப் படிமங்களும், ஸ்ரீ ஜோதிலிங்கம், அட்சயலிங்கம், கோடிலிங்கம் ஆகிய இலிங்க வடிவங்களும், மகாலட்சுமி, சேட்டை ஆகியோர் சிலைகளும் உள்ளன.

### பள்ளியறை


வடதிசையில் பள்ளியறையில் உள்ள, கண்ணாடி பதித்த வேலைப்பாடு கொண்ட மண்டபத்தில் ஊஞ்சலில் அம்மையின் திருமேனி உள்ளது. பக்கச் சுவர்களில், கற்பகத்தரு, காமதேனு இவற்றின் ஓவியங்களும், பார்வதி, சிவலிங்கம் ஆகியனவும், ஊஞ்சலில் அமர்ந்துள்ள சிவனுக்குத் தேவி பழம் ஊட்டும் காட்சியும், சிவனைத் தன் மடியில் கிடத்தியிருக்கும் கோலமும், சிவனும் உமையும் தழுவி நிற்கும் காட்சியும் ஓவியமாக உள்ளன. இதன் முன்னுள்ள கண்ணாடி மண்டபத்தில், எட்டுத் தேவியரின் உருவங்களும், நாட்டியமாடும் பெண்ணுருவமும், ஆறு கலைஞர்கள் தஞ்சாவூர் பேண்ட் இசைக்கும் காட்சியும், சமயக் குரவர் பாடப், பெண்டிர் நாட்டியமாடும் காட்சியும் ஓவியமாக்கப்பட்டுள்ளன. விதானம், கண்ணாடிகளாலும், வண்ணக் கற்களாலும் அணி செய்யப்பட்டுள்ளது. இராமருக்குத் தனிச் சன்னதியும், பைரவர், ஜுரகரேசுவரர், யோகமூர்த்தி, கோவிந்த தீட்சதர், அவர் மனைவி ஆகியோர் சிலைகளும் உள்ளன. இக்கோயிலில் உற்சவ மண்டபம் ஒன்றும், அலங்கார மண்டபமொன்றும் உள்ளன.




| | |
|---|---|
| 1. வாயு தீர்த்தம் | 11. அக்னி தீர்த்தம் |
| 2. கங்கை தீர்த்தம் | 12. காவேரி தீர்த்தம் |
| 3. பிரம்ம தீர்த்தம் | 13. யம தீர்த்தம் |
| 4. யமுனை தீர்த்தம் | 14. குமரி தீர்த்தம் |
| 5. குபேர தீர்த்தம் | 15. நிருதி தீர்த்தம் |
| 6. கோதாவரி தீர்த்தம் | 16 பயோஷினி (பாலாறு) தீர்த்தம் |
| 7. ஈசானிய தீர்த்தம் | 17. தேவ தீர்த்தம் |
| 8. நர்மதை தீர்த்தம் | 18 வருண தீர்த்தம் |
| 9. இந்திர தீர்த்தம் | 19. சரபு தீர்த்தம் |
| 10. சரஸ்வதி தீர்த்தம் | |

20. கன்னியா தீர்த்தம், அறுபத்தாறு கோடி தீர்த்தம்.


மகாமகக் குளமும், தீர்த்தக் கிணறுகளும்
(வரைபடம்)




கும்பேசுவரர் திருக்கோயில் கோபுரத் தோற்றம்



மகாமகக் குளம் — புனித கிணறுகள்



சாரங்கபாணிக் கோயில் — சித்திரத்தேர்



அதிட்டானம் — ஸ்ரீ சங்கர மடம்

## ஸ்ரீகாசிவிசுவநாதர் கோயில்-கும்பகோணம்

குடந்தை மகாமகக் குளத்தின் வடக்குக் கரையிலுள்ள மேற்கு நோக்கிய கோயில் இது. இதன் பழைய பெயர் திருக்குடந்தைக் காரோணம் என்பது. 7-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஞானசம்பந்தர் இத்தலத்தை,

'வாரார் கொங்கை மாதோர்பாக மாகவார் சடை
நீரார் கங்கை திங்கள் சூடி நெற்றி ஒற்றைக் கண்
கூரார் மழுவொன் றேந்தி யந்தண் குழகன் குடமூக்கில்
காரார் கண்டத்து எண்டோள் எந்தை காரோணத்தாரே'

என்று புகழ்ந்து பாடியுள்ளார்.

தற்போது இக்கோயில் காசிவிசுவநாதர் என்ற பெயரில் அழைக்கப்பெற்று வருகிறது. முற்காலச் சோழர் காலத்தில் கட்டப் பட்ட இக்கோயில் கால வெள்ளத்தில் சிதைவுற்றுப் பல்வேறு திருப்பணிகளைப் பெற்றுக் காண்பதற்குப் புது கோயிலாகக் காட்சியளிக்கிறது. தற்போது இக்கோயிலிலுள்ள நவ கன்னிகளின் உருவங்கள் பலவும் முற்காலச் சோழர் கலைப்படைப்பாகும். அவ்வாறு இக்கோயில் திருச்சுற்றில் உள்ள பிராமி, மாகேசுவரி, வைஷ்ணவி, கௌமாரி, இந்திராணி, வாராகி, சாமுண்டி ஆகிய கன்னியர் எழுவரின் உருவங்களும் சேட்டையின் உருவமும் முற்காலச் சோழர் காலத்துச் சிற்பங்களாக இன்றளவும் இக்கோயிலில் வழி பாட்டில் இருந்து வருகின்றன. திருச்சுற்றிலுள்ள பைரவர், சூரியன், சந்திரன் முதலிய பரிவார தெய்வங்கள் பிற்காலச் சோழர் காலத்தவை.

இக்கோயில், கருவறை, அர்த்தமண்டபம், மகாமண்டபம், முகமண்டபம், திருச்சுற்றுகள், கோபுரங்கள் ஆகிய பகுதிகளைக் கொண்டு விளங்குகிறது. கோயிற் கருவறை சதுர வடிவுடையது.

இக்கோயிற் கருவறையின் தேவகோட்டங்களில் வடக்கே நான்முகனும் கிழக்கே லிங்கோத்பவரும், தெற்கே தட்சி

மூர்த்தியும் அமைக்கப்பட்டுள்ளனர். அர்த்த மண்டபத்தின் புறச் சுவரில் வடக்கே துர்க்கையும், தெற்கே விநாயகரும் காணப்படுகின்றனர். அர்த்த மண்டபத்தின் வடபுறம் சண்டிகேஸ்வரருக்கென்று தனிச்சந்நிதி உள்ளது. ஏனைய பரிவாரங்களான சூரியன், சந்திரன், சப்தமாதர் முதலியவை கிழக்குத் திருச்சுற்றில் வரிசையாக வைக்கப்பட்டுள்ளன.

மகாமண்டபத்தின் வடதிசையில் உள்ள கல் மேடையின் பின் புறம் ஒன்பது கன்னிகளின் சிற்றாலயம் உள்ளது. நீண்ட கல் மேடைமீது கங்கை, யமுனை, நர்மதை, சரசுவதி, காவேரி, கோதாவரி, துங்கபத்திரை, கிருஷ்ணை, சரயூ ஆகிய ஒன்பது நதித் தலைவிகளின் உருவங்களும் ஆள் உயரத்தில் நின்ற கோலத்தில் காட்சியளிக்கின்றன. இவற்றில் முதலில் உள்ள கங்கையும், நான்காவதாக உள்ள சரசுவதி சிற்பமும் நான்கு கைகளுடன் காட்டப்பட்டுள்ளன ஏனைய சிற்ப உருவங்கள் இரண்டு கைகளை மட்டுமே கொண்டு உள்ளன.

இங்குள்ள ஒன்பது நதித் தலைவியர்களில் கோதாவரி, துங்கபத்திரை தவிர ஏனைய சிற்பங்களை கி.பி. 9, 10-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த சோழர் காலச் சிற்பங்களாகக் கருதலாம். ஏனைய இரண்டும் 12-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவை. குடந்தைக் கீழ்க்கோட்டம் பாடிய திருநாவுக்கரசர் தம் பாடலில் கங்கை, யமுனை முதலிய நதிகளைக் குறித்துச் சொல்வதைக் காண்கிறோம். எனவே ஏழாம் நூற்றாண்டு முதல் இத்தலம் புனிதமான நதித் தலைவிகளோடு தொடர்புடையதாகக் கருதப்பட்டதை உணரலாம். எனவேதான் குடந்தைக் காரோணம் எனப் புகழப்படும் இத் தலத்தில் ஒன்பது நதித் தலைவிகளின் உருவங்களை முற்காலச் சோழர்கள் வடித்துள்ளனர்.

## ஸ்ரீநாகேசுவரர் கோயில்

குடந்தையில் அமைந்துள்ள மிகப் பழைய கோயில்களில் இதுவும் ஒன்றாகும். 'குடந்தைக் கீழ்க்கோட்டம்' என்பது இக் கோயிலின் பழைய பெயர்.

ஆதிசேடன், சூரியன் ஆகியோர் இத்தலத்தை வழிபட்டதாகப் புராணம் கூறும். ஆண்டுதோறும் சித்திரை 10, 11, 12 ஆகிய

மூன்று நாட்களில் காலை 6-00 மணி முதல் 6-30 மணிக்குள் சூரியனின் ஒளிக்கதிர்கள் நாகேசுவரர் இலிங்கத் திருமேனியின் மேல் விழுவதும், சூரிய பூசை நிகழ்வதும் குறிப்பிடத்தக்க அரிய காட்சி யாகும். இவ்வாலயத் திருச்சுற்றில் சூரியனுக்கென்று தனிச்சன்னதி ஒன்றும் உள்ளது.

அப்பர் பெருமான் இதனைக் குடந்தைக் கீழ்க்கோட்டம் எனப் போற்றியுள்ளார். இக்கோயில் கி.பி. ஏழாம் நூற்றாண்டில் செங்கற் கோயிலாகத் திகழ்ந்திருக்க வேண்டும். இக்கோயில் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டில் ஆதித்த சோழனால் கற்றளியாக எடுப்பிக்கப்பட்டுள்ளது. இக்கோயில் உபானம் முதல் முதற்றளம் வரை கருங்கல் திருப்பணியாகும். அதன்மேலுள்ள கிரீவமும், சிகரமும் சீரிய சுதை வேலைப்பாடு கொண்டவை. கிரீவமும் சிகரமும் சதுர வடிவுடையன. கருவறையின் கோட்ட மாடங்களில் தெய்வ உருவங்களையும், இடையிடையே பேரழகு மிக்க இளவரசர், இளவரசி, அமைதியின் தோற்றமாக விளங்கும் பௌத்தத் துறவிகள், வீரர்கள் முதலிய சிற்ப உருவங்களையும் வியக்கத்தகும் வகையில் தோற்றுவித்துள்ளனர். தெற்குக் கோட்டத்தில் தெட்சிணாமூர்த்தியையும், மேற்கில் விடையின் மீது சாய்ந்த நிலையில் அர்த்தநாரியையும், வடக்கில் நான்முகனை நின்ற நிலையிலும், சிற்ப வடிவில் காணலாம். அர்த்த மண்டபப் புறச் சுவரிலிருந்து வருவோமானால். முதலில் அருள் வழங்கும் நிலையில் இளந்துறவியின் மெலிந்த கோலமும், அடுத்த கோட்டத்தில் தலையில் சுருண்ட கேசமும், நீண்ட தொள்ளைக் காதுகளும், அகன்ற மார்பும், இடது தோளில் அங்கியும், இடையில் மடிப்புடன் கூடிய ஆடையும் அணிந்து நிற்கும் முதிர்ந்த பௌத்தத் துறவியின் நின்ற கோலமும், அவர் முகத்தில் தோன்றும் ஆழ்ந்த அமைதியும் பார்ப்போர் கவனத்தை ஈர்த்துச் சிந்திக்க வைக்கின்றன. அடுத்துள்ள கோட்டத்தில் அழகிய பெண் அணங்கு இடக் கையில் மலர் ஏந்தி, வலக் கையைத் தொடை மீது கொண்டு நின்ற கோலத்தில் காட்சியளிக்கின்றாள். அடுத்து தெட்சிணாமூர்த்தியின் இடப்புறம் அழகே உருவான பேரழகின் தோற்றம் பெண்ணுருவில் நின்ற கோலத்தில் காட்சியளிக்கிறது. மற்றொரு இள நங்கை வலக்காலை முன் வைத்து நடந்து வரும் கோலத்தில் காட்சியளிக்கிறாள். மேற்கு மாடத்தில் மணி வேலைப்பாடு மிக்க தலைப்பாகை அணிந்து முகத்தில் மீசையுடன், வலக்கையால் எச்சரித்து நிற்கும் வீரனின்

உருவைக் காணலாம். அடுத்து, கையில் தாமரை மலர் ஏந்தி உடலை வலப்புறம் திருப்பி நிற்கும் அரச குமாரனின் நின்ற கோலம் கண்ணைக் கவர்கிறது. அடுத்து அனல் வடிவில் நீண்ட தலைப்பாகை அணிந்த தளவாயின் நின்ற கோலம் காட்சியளிக்கிறது. இவ்வாறு எல்லாக் கோட்டங்களிலும் பேரழகு மிக்க சிற்பங்களைக் காண்கிறோம். அதிட்டானத்தின் கண்டப்படைகளில் உள்ள இராமாயணச் சிற்பங்கள் குறிப்பிடத்தக்கவை. இராமன், இலக்குவன், சீதையைக் குகன் படகில் அழைத்துச் செல்வது, வாலி சுக்கிரீவன் சண்டை முதலிய சிற்பங்களைக் காணலாம். இராமாயணச் சிற்பங்கள் ஆதித்த சோழன் காலத்துக் கோயில்களில் தொடர் சிற்பங்களாகச் செதுக்கப்பட்டுள்ளதற்கு இக்கோயில் சிறந்த எடுத்துக் காட்டாகத் திகழ்கிறது.

### கங்கை கொண்ட விநாயகர்

முதலாம் இராசேந்திரன் தன் கங்கை வெற்றியின் நினைவாகத் தமிழகத்திற்குக் கொண்டு வந்த சிற்பங்களில் இவ்வுருவம் குறிப்பிடத் தக்கது. இது பாலர் காலக் கலைப் படைப்பாகும். கி.பி. 1025 க்கு முற்பட்டது. கருப்புக் கல்லால் செதுக்கப்பட்டுள்ள இச்சிற்பம் இக்கோயில் முகமண்டபத்தின் தென்மேற்கு மூலையில் உள்ள சிறு சந்நிதியில் உள்ளது.

### கல்தேர்

நடராசர் மண்டபம் இக்கோயில் இரண்டாம் பிரகாரத்தின் வடகிழக்கு மூலையில் அமைந்துள்ளது. இதனைக் 'கூத்தாண்டார் கோயில்' என்று கூறுவர். தேர் வடிவிலுள்ள இம்மண்டபத்தைக் குதிரைகளும், யானைகளும் இழுத்துச் செல்லும் வகையில் அமைக்கப் பட்டுள்ளது. சோழர் கால இக்கல் யானைகள் மராட்டியர் காலத்தில் சுதையும் வண்ணமும் பூசப்பட்டுள்ளன. இம்மண்டபத்தின் இரு புறமும் இருபெரும் தேர்ச் சக்கரங்கள் கல் அச்சில் பொருத்தப் பட்டுச் சுழலும் நிலையில் இயற்கையாகக் காட்டப்பட்டுள்ளது. இச்சக்கரத்தின் முன்புறம், மண்டபத்தை இழுத்துச் செல்லும் நிலையில் பாய்ந்து செல்லும் இரு குதிரைச் சிலைகளைக் காண்கிறோம். இம் மண்டபத்தின் அதிட்டானங்களின் இடையேயுள்ள கண்டப் பகுதி களில் பலவகை நாட்டியப் பெண்கள் நடனமாடும் காட்சிகள் சித்தரிக்கப்பட்டுள்ளன. இம்மண்டபத்தின் கருவறைப் பகுதியில்

கோபாலன் குழலூத, சிவகாமி தாளமிட, குடந்தைக் கூத்தர் ஆனந்தத் தாண்டவமாடும் அழகிய திருக்கூத்தைச் சிலை வடிவில் கண்டுகளிக்கலாம். கூத்தாடும் இப்படிமம் கி.பி. பத்தாம் நூற்றாண்டைச் சார்ந்த முற்காலச் சோழர் கலைப் படைப்பாகும். இக்குடந்தைக் கூத்தருக்குப் பிற்காலத்தில் தனி மண்டபம் எடுப்பித்துச் சிறப்பித்துள்ளனர்.

## ஸ்ரீ அபிமுக்தீசுவரர் கோயில்

மகாமகக் குளத்தின் கீழ்க்கரையில் இக்கோயில் அமைந்துள்ளது. கோயில் சந்நிதி மேல்திசை நோக்கியது. இங்குச் சுமதிக்குக் குட்ட நோயும், சுதன்மனுடைய மகனுக்கு ஊமைத் தனமும் நீங்கியதாகப் புராணம் கூறும். இக்கோயிற் கருவறை சதுர வடிவமானது. கருவறையில் உறையும் இறைவன் இலிங்க வடிவில் காட்சி தருகிறார். கருவறையின் மேல் சுதையாலான ஏகதள விமானம் எழுப்பப் பட்டுள்ளது. கோயில் அதிட்டானம் எளிமையான அமைப்புடையது. கருவறையின் கோட்டங்களில் வடக்கு, மேற்கு, தெற்கு ஆகிய திசைகளில் முறையே நான்முகன், மாதொருபாகன், தட்சிணா மூர்த்தி ஆகிய சிற்ப உருவங்கள் அமைந்துள்ளன, அர்த்தமண்டபக் கோட்டத்தில், வடக்கே துர்க்கையும், தெற்கே விநாயகரும் காட்சியளிக்கின்றனர். இக்கோயில் அதிட்டானம் முதல் கபோதம் வரை கருங்கல்லாலும் ஏனைய விமானப் பகுதி செங்கல், காரை சுதையாலும் எடுப்பிக்கப்பட்டுள்ளது. சோழர் காலக் கோயில் ஒன்றின் சுவடுகளும் சிற்ப உருவங்களும் இக்கோயிலிற் காணக்கிடைக்கின்றன. தற்போதுள்ள கோயில் கி.பி. 16—17-ஆம் நூற்றாண்டுகளில் முழுமையாகத் திருப்பணி செய்யப்பட்டுள்ளது. கருவறையின் முன்புறம் உள்ள அர்த்த மண்டபம் செவ்வக வடிவில் தூண்கள் இன்றிக் கீழ் மேலாக நீண்டுள்ளது. அர்த்த மண்டபத்தின் முன்புறம் மகாமண்டபம் அமைந்துள்ளது. மண்டபத்தின் வடதிசையில் இறைவிக்குத் தனிச் சந்நிதி அமைந்துள்ளது. சந்நிதியின் எதிரே மகாமண்டப வெளிவாயில் தென் திசையில் அமைந்துள்ளது.

## அமுதவல்லி சந்நிதி

இச்சந்நிதி தென்திசை நோக்கியது. சதுரவடிவுடைய கருவறையில் அம்மன் நான்கு கைகளுடன் நின்ற கோலத்தில் காட்சி

யளிக்கிறார். அம்மனின் உருவம் 16-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. நாயக்கர் கால வடிவமைதியை உடையது.

**சோமாஸ்கந்தர் சந்நிதி**

இச்சந்நிதியில் ஒரே பீடத்தில் சிவனும் உமையும் வீற்றிருக்க இடையில் ஸ்கந்தர் தாமரை மலரில் நின்ற கோலத்தில் காட்சி யளிக்கும் செப்புத் திருமேனி இடம் பெற்றுள்ளது. இவ்வுருவங்கள் பிந்திய சோழர் காலத்தவை. சோமாஸ்கந்தரின் வலப்புறம் உள்ள தனி அம்மன் இருகைகளுடன் இடையை வலப்புறம் ஒடித்து தாமரை இருக்கை மீது நின்ற கோலத்தில் காட்சி அளிக்கிறாள். கி.பி. 12-13-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த இத் தெய்வ உருவங்களின் பீடங்கள் நாயக்கர் காலத்தில் செய்து இணைக்கப்பட்டுள்ளன.

**ஆறுமுகப்பெருமான் சந்நிதி**

இங்கு வள்ளி, தெய்வயானை சூழத் தோன்றும் ஆறுமுகப் பெருமானின் சிற்ப வடிவினைக் காண்கிறோம். மயில் வாகனத்தின் மீது ஆறுமுகமும் பன்னிரு தோள்களும் கொண்டு எழுந்தருளியுள்ள இவரது சிலை வனப்பு மிக்கது. இச்சிற்பங்கள் கி.பி. 16-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவை.

**ஆடவல்லான் சந்நிதி**

இச்சந்நிதியின் நடுவே மேடை மீது பெரிய நடராசரும் அன்னை சிவகாமியும் செப்புத் திருமேனியாகக் காட்சியளிக் கின்றனர். இவ்விரு வடிவங்களும் பிற்காலச் சோழர் கலைப் பணியாகும்.

திருச்சுற்றின் வடக்கே சண்டிகேசுவரர் சந்நிதி அமைந்துள்ளது. இச்சந்நிதிக்குரிய பழைய சண்டிகேஸ்வரரின் சிற்ப வடிவம் மகா மண்டப வாயிலில் தென் திசையில் காணப்படுகிறது. அதனை யடுத்து மண்டபம் அமைந்துள்ளது. இம்மண்டபம் செவ்வக வடி வுடையது. விதானம் வண்டிக்கூரையை ஒத்த அமைப்புடையது. இதை வௌவால் மண்டபம் என அழைப்பர். இம்மண்டபத்தின் வடமேற்கு மூலையில் பெரிதும் சிறிதுமாக இரு பைரவர் சிற்பங்கள் உள்ளன. சிறிய சிற்பம் காலத்தால் பழமை வாய்ந்தது. இவை சோழர் காலத்திய சிற்பங்கள் ஆகும்.

## நந்தி மண்டபச் சிற்பங்கள்

நந்தி மண்டபத்தின் முன்புறம் உள்ள பலிபீடமும் நந்தியும் முற்காலச் சோழர் பணியாகும். கி.பி. 10-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவை. நந்தியின் பின்புறம் உள்ள பலி பீடம் வேலைப்பாடு மிக்கது. நான்கு திசைகளிலும் நந்திகள் சூழ அமர்ந்த தாமரை மலர் மீது இப்பீடம் அமைந்துள்ளது. நந்தி மண்டபத்தின் எதிரே உள்ள மேடை மீது சண்டிகேசுவரரின் சிற்பம் காணப்படுகிறது. இவ்வுருவமும் முற்காலச் சோழர் படைப்பே. நந்தி மண்டபத்தை அலங்கரிக்கும் தூண்களில் சிற்பங்கள் நிறைந்து விளங்குகின்றன.

## ஸ்ரீகௌதமேசுவரர் கோயில்

மகாமகக் குளத்தருகே தென்மேற்கு மூலையில் கீழ்த்திசை நோக்கி இக்கோயில் உள்ளது. கருவறையில் உறையும் இறைவன் உபவீதேசுவரர் என்ற பெயரில் வழங்கப்பெறுகிறார். அமுதகுடத்தில் பூணூல் விழுந்த இடம் ஆதலால் இப்பெயர் என்பர். இக்கோயில் கருவறை, அர்த்தமண்டபம், மகாமண்டபம், முகமண்டபம், திருச்சுற்று மாளிகை, கோபுரம், பரிவார ஆலயங்கள் ஆகிய பகுதிகளைப் பெற்று விளங்குகிறது. இக்கோயில் உபானம் முதல் சுவர் வரை கருங்கல்லும், அதன் மேலுள்ள கபோதம், சிகரம் ஆகிய விமானப் பகுதிகள் சிமென்ட் கலவையைக் கொண்டும் எழுப்பப் பட்டுள்ளது. இக்கோயில் ஒரு தள விமானத்தை உடையது. விமானக் கோட்டங்கள் சிற்பங்கள் இன்றி எளிமையாகக் காட்சி தருகின்றன. கருவறையின் கோட்டங்களில் தெற்கே தெட்சிணா மூர்த்தியும், மேற்கே இலிங்கோத்பவரும், வடக்கே நான்முகனும் அமைக்கப்பட்டுள்ளனர். அர்த்தமண்டபத்தின் தென் திசையில் விநாயகரும் வடதிசையில் துர்க்கையின் உருவங்களும் உள்ளன. அர்த்தமண்டபம் தூண்கள் இன்றி எளிமையான அமைப்புடையது. அர்த்தமண்டபத்தின் முன் உள்ள மகா மண்டபம், நீள் சதுர வடிவில் உள்ளது. இம்மண்டபத்தை இரண்டு வரிசைகளில் எட்டு தூண்கள் அலங்கரிக்கின்றன. மகாமண்டபத்தின் வடதிசையில் சௌந்தர நாயகி அம்மன் சந்நிதியும் நடராசர் சன்னதியும் தென் திசை நோக்கி அமைந்துள்ளன. மேற்கில் இருபுறமும் உற்சவத் திருமேனிகள் உள்ளன. சுப்பிரமணியர், வள்ளி, தெய்வயானை, அஸ்திர தேவர், சண்டிகேசுவரர், விநாயகர், சோமாஸ்கந்தர் ஆகிய செப்புத் திரு மேனிகள் உள்ளன. இவை பிந்திய சோழர் மற்றும் நாயக்கர்

காலத்தவை. சௌந்தரநாயகி அம்மன் தென்திசை நோக்கி நான்கு கைகளுடன் நின்ற கோலத்தில் காட்சியளிக்கிறார். இக்கோயிலுக்கு உரிய பழைய காமகோட்ட நாச்சியார் திருவுருவம் கோயிலின் திருச் சுற்றில் வைக்கப்பட்டுள்ளது.

## நடராசர் சந்நிதி

இச்சந்நிதியில் ஆடவல்ல பெருமானும் சிவகாமியும் வழிபாட்டில் உள்ளனர். மேற்கையில் உடுக்கையும் கனலும் ஏந்தி, கீழ்க்கைகளால் அபயமும் வரத முத்திரையும் காட்டி, முயலகன் மீது திருவடி ஊன்றிப் பெருமான் ஆடுகிறார். இங்கு நடராசருக்கு விரிசடை இல்லை. கங்கையும் பிறையும் அணி செய்யும் நீண்ட சடை விளங்குகிறது. வலக்காதில் மகரக் குழையும், இடக்காதில் பத்ர குண்டலமும் அலங்கரிக்கின்றன. இத்திருமேனி கி.பி. 15-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. நடராசனின் திருவாசியைச் சுற்றி 14 தீப்பிழம்புகள் உள்ளன. மகாமண்டபத்தின் வெளிச் சுவரில் கோட்ட மாடங்கள் உள்ளன.

## கௌதம முனிவர் உருவம்

இத்தலத்தை வழிபட்ட கௌதம முனிவருக்கு இக்கோயிலின் திருச்சுற்றின் தென்மேற்கு மூலையில் சிற்ப உருவம் உள்ளது. இவர் சதுர இருக்கையின் மீது இடது காலை மடித்து வலது காலைத் தொங்கவிட்டு ஜபித்த நிலையில் காட்சியளிக்கிறார். வலக்கையில் உத்திராட்ச மாலையும் இடக்கையில் குடுவை உருவில் கமண்டலமும் காட்டப்பட்டுள்ளன. நீண்ட தொள்ளைக் காதுகளும், அகன்ற நெற்றியும், மீசையும், நீண்ட தாடியும் கொண்டுள்ள கௌதமரின் மார்பில் நீண்ட உருத்திராட்ச மாலை அலங்கரிக்கிறது. கௌதமரின் திருவடியில் அகலிகை பாதபூஜை செய்யும் நிலையில் காட்டப்பட்டுள்ளார். இச்சிற்பம் கி.பி. 16-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. இக்கோயில் திருச்சுற்றில் கணபதி, சுப்பிரமணியர், வள்ளி, தெய்வயானை, மகாலட்சுமி, பைரவர், சூரியன் ஆகிய பரிவார தெய்வங்களும் இடம்பெற்றுள்ளன.

## ஸ்ரீசோமேசுவரர் கோயில்

இது குடந்தை நகரக் காவல் நிலையத்திற்கு எதிரே அமைந் திருக்கும் சிவாலயம் ஆகும். பிரளய காலத்தில் அமிர்த கும்பம்

பாணத்தால் சிதறுண்டபோது அத்துடன் இணைக்கப் பெற்றிருந்த உரி தெறித்து விழுந்த இடமாதலால் (சிக்கம்-உறி) 'சிக்கேசம்' என்கிற திருப்பெயர் இம்மூர்த்திக்கு ஏற்பட்டது. சந்திரன், வியாழன் ஆகியோர் வழிபட்டதாகத் தலபுராணம் கூறுகிறது. இக்கோயில் கருவறையின் மேல் ஏகதள விமானம் உள்ளது. உபானம் முதல் கூரை வரை கருங்கல்லாலும், அதன் மேல் உள்ள ஏகதள விமானம் செங்கல்லும், காரையும் கொண்டும் கட்டப்பட்டுள்ளது. விமானத்தை அலங்கரிக்கும் சிகரமும், கிரீவமும் வட்ட வடிவுடையன. கருவறையைச் சுற்றியுள்ள சுவர்களில் தெற்கு, மேற்கு, வடக்கு ஆகிய திசைகளில் முறையே தட்சிணாமூர்த்தி, ரிஷப அர்த்தநாரி, பிரம்மா ஆகிய உருவங்கள் கோட்ட மாடங்களில் அமைக்கப்பட்டுள்ளன. கருவறையின் முன் உள்ள அர்த்த மண்டபம் சதுரவடிவில் தூண்கள் இன்றிக் காட்சியளிக்கிறது. அர்த்த மண்டப வாயிலில் கதையின் மீது காலை ஊன்றியவாறு இரு துவாரபாலகர் சிற்பங்கள் உள்ளன. அர்த்த மண்டபத்தின் முன்புறம் சதுரவடிவுடைய மகாமண்டபம் அமைந்துள்ளது. இம்மண்டபத்தை இரு வரிசைகளில் ஆறு எளிய தூண்கள் அலங்கரிக்கின்றன. இம்மண்டபத்தின் நடுவே நந்தியும், பீடமும், மேடை மீது அமைந்துள்ளன. இம்மண்டபத்தின் தென் கிழக்கு மூலையில் விநாயகரின் சிற்பத்தைக் காணலாம். இம் மண்டபத்தின் வடமேற்கு மூலையில் வெளிவாயில் உள்ளது. முகத்தைச் சற்று இடப்புறம் திருப்பி ஆடும் பெருமானின் இவ்வுருவம் கி.பி. 10-11-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. இடைக்காலச் சோழர் படைப்பாக விளங்குகிறது. நடராசரின் அருகில் உள்ள சிவகாமியின் நின்ற கோலப் படிமம் காலத்தால் பிற்பட்டது. நடராசர் சபையின் மேல் பகுதியிலும் உலோகச் சிலைகள் வைக்கப் பட்டு வழிபாட்டில் உள்ளன. ஆடிப்பூர அம்மன், சுப்பிரமணியர், வள்ளி, தெய்வயானை, சந்திரசேகரர், சந்திரசேகர அம்மன், சோமாஸ்கந்தர், தனி அம்மன், விநாயகர், பிரதோஷநாயகர், சண்டிகேசுவரர், வியாழன், சமயக்குரவர் நால்வர், பள்ளியறைச் சொக்கர், அம்மன் ஆகிய செப்புத் திருமேனிகள் உள்ளன. இவை கி.பி. 16-17-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவை. நடராசர் மண்டபத் திற்கு முன்புறம் அம்மன் சந்நிதி உள்ள முகப்பு மண்டபத்தைக் காணலாம். இம்மண்டபத்தின் முன்புறம் தெற்கு நோக்கிய வெளி மண்டபத்தைக் காணலாம், இவ்வெளி மண்டபத்தின் உத்தரங் களின் பக்கங்களில் 63 நாயன்மார்கள், ஒன்பது தொகை அடியார்

களுடைய உருவங்கள் ஓவியமாகத் தீட்டப்பட்டுள்ளன. இந்த ஓவியங்கள் கி.பி. 19-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவை. இக்கோயில் இராசகோபுரம் ஐந்து நிலைகளை உடையது. தவிர தென் திசையிலும் மேல் திசையிலும் கோபுரம் இன்றி வாயில்கள் மட்டும் உள்ளன. இக்கோயில் ஒரு திருச்சுற்றை உடைய கோயிலாகும்.

## ஸ்ரீபாணபுரீசுவரர் கோயில்

குடந்தையின் வடகிழக்குப் பகுதியில் பாணபுரீசுவரர் கோயில் அமைந்துள்ளது. பிரளய காலத்தில் அமுத குடத்தை உடைப்பதற்காகச் சிவபெருமான் கிராத மூர்த்தியாக வேட வடிவம் கொண்டு அம்பை எய்த இடம் இது என்பது புராணம். பாணபுரி என்று அழைக்கப்பட்ட இந்த இடம் இப்போது 'பாணாதுறை' என்று அழைக்கப் பெறுகிறது. வியாசமுனிவர், வங்கதேசத் தரசன் கரசேனனின் மனைவி காந்திமதி ஆகியோர் வழிபட்ட தலமாகக் கருதப்படுகிறது. இறைவன் சந்நிதி கிழக்கு நோக்கியும் அம்மன் சந்நிதி தெற்கு நோக்கியும் அமைந்துள்ளன.

இக்கோயில் மூன்றாம் குலோத்துங்கன் காலத்தில் கட்டப் பட்டது. இக்கோயில் இருக்கும் பகுதி குடமூக்கில் இருந்து பிரிக்கப் பட்டு சோமநாத மங்கலம் என்று வழங்கப்பட்டதையும், இறைவன் சோமநாத தேவர் என்று பெயர் பெற்றிருந்ததையும் இக்கோயிலில் உள்ள கல்வெட்டுக்கள் தெரிவிக்கின்றன.

## ஸ்ரீஆதிகம்பட்ட விசுவநாதர் கோயில்

குடந்தையில் ஸ்ரீ விசுவநாதசுவாமி என்ற பெயரில் அமைந்துள்ள கோயில்கள் நான்கு. ஒன்று மகாமகக் குளத்திற்கு வடபால் உள்ளது. இரண்டாவது, மடத்துத் தெருவின் வடகோடியில் உள்ள காவேரி பகவத் படித்துறையில் அமைந்திருப்பது. மூன்றாவது நகரில் சோலையப்பன் தெருவில் காவிரி ஆற்றை ஒட்டி அமைந்திருப்பது. நான்காவதாக உள்ள இக்கோயில் ஆதிகும்பேசுரர் கோயிலுக்கு மேற்கே உள்ள பேட்டைத் தெருவில் அமைந்துள்ளது. மற்ற மூன்று கோயில்களும் இதே பெயரைப் பெற்றிருப்பதால் இத்திருக்கோயில் ஸ்ரீகம்பட்ட விசுவநாதர் என்ற அடையாளப் பெயரோடு அழைக்கப்பட்டு வருகிறது.

கம்பட்டம் என்றால் அக்கசாலை (நாணயம் செய்யுமிடம்) என்று பொருள். தஞ்சை நாயக்கர் காலத்தில் இந்தப் பகுதியில் அரசின் காசுகள் செய்யும் தொழிற்சாலை அமைந்திருந்தமையால் இங்கு திருக்கோயில் கொண்டுள்ள விசுவநாதப் பெருமான் கம்பட்ட விசுவநாதர் என்று அழைக்கப்பட்டார்.

இக்கோயிலில் உறையும் இறைவனுக்கு 'மாலதி வனேசுவரர்' என்ற சிறப்புப் பெயரும் உண்டு. இங்குள்ள இறைவி 'ஆனந்த நிதியம்பிகை' என்கிற திருப்பெயரில் அழைக்கப் பெறுகிறார்.

## ஸ்ரீகாளத்தீசுவரர் கோயில்

இத்திருக்கோயில் காவிரியின் தென்கரையை ஒட்டி அமைந்துள்ளது. காஞ்சி ஸ்ரீசங்கராச்சாரிய சுவாமிகளுக்காகத், தஞ்சையை ஆண்ட சரபோசி மன்னரால் இத்திருக்கோயில் நிறுவப்பட்டது. இத்தலத்திலுள்ள இறைவன் காளத்தீசுவரர் என்ற பெயரிலும், இறைவி ஞானாம்பிகை என்ற பெயரிலும் வழங்கப்படுகின்றனர். இத்தலத்திலுள்ள இறைவன் இறைவியை வழிபட்டால் வாயுலிங்கத் தலமான காளத்தியில் வழிபட்ட பலன் கிடைக்கும் என நம்பப் படுகிறது. இக்கோயில் கீழ்த்திசை நோக்கி அமைந்துள்ளது. கருவறை, அர்த்த மண்டபம், மகா மண்டபம், முக மண்டபம், அம்மன் சந்நிதி, அதன் முகமண்டபம், நடராசர் சந்நிதி, பள்ளியறை, கல்யாண சுந்தரேசுவரர் சந்நிதி, திருச்சுற்று, கோபுரம் ஆகிய பகுதிகளைக் கொண்டு விளங்குகிறது. சதுரவடிவுடைய கருவறையில் ஆவுடையார் வட்ட வடிவிலிருக்கக் கோமுகம் வடக்கு நோக்கி அமைந்துள்ளது. கருவறை அர்த்தமண்டபங்களின் மேல் ஒரு தள விமானம் எழுப்பப்பட்டுள்ளது. அதன் சிகரமும் சதுர வடிவில் தூண்களின்றி எளிய அமைப்புடனுள்ளது. கிரீவம் வட்ட வடிவுடையது. மகாமண்டபத்தின் வடப்புறம் ஞானாம்பிகை சந்நிதி உள்ளது. தென்திசை நோக்கிய இச்சந்நிதியில் எழுந்தருளியுள்ள அம்மை நான்கு கைகளுடன் நின்ற கோலத்தில் காட்சியளிக்கிறார். இச்சந்நிதியில் காளை மீது இடக்கையை ஊன்றி நிற்கும் நிலையில் சிவனது நின்ற கோலமும், வலப்புறம் உமையின் உருவமும், இடப்புறம் சிவனது வாகனமும் தனித்தனி பீடங்களில் காட்சியளிக்கின்றன. இங்குச் சிவன் இரண்டு கைகளுடன் விளங்குவது குறிப்பிடத்தக்கது. சிவனது வலப்புறத்தில் நிற்கும் உமை இடக்கையைக் கடகமுத்திரையிலும், வலக்கையைத் தாழ்கரமாக கொண்டு, இடையை வலப்புறமாக

ஒடித்துத் திரிபங்கியாகக் காட்சியளிக்கிறாள். சிவனது இடப்புறம் அவரது காளை வாகனம் சிவனைப் பார்க்கும் நிலையில் தலையை வலப்புறம் திருப்பி நிற்கும் காட்சியைக் காணலாம். இம்மூன்று திருமேனிகளும் கி.பி. 11-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவை. இச் சந்நிதிக்கு மேற்புறம் பள்ளியறையும் கீழ்ப்புறம் கல்யாண சுந்தரேசுவரர் சந்நிதியும் அமைந்துள்ளன. மகாமண்டபத்தின் முன்புறமுள்ள முக மண்டபத்தில் வட திசையில் நடராசருக்கென்று தனிச் சந்நிதி உள்ளது. இச்சந்நிதியில் நடராசர், சிவகாமி ஞானசம்பந்தர் ஆகிய தெய்வங்களின் செப்பு வடிவங்கள் வழி பாட்டில் உள்ளன. இவற்றில் ஞானசம்பந்தர் சிலை கி.பி. 12-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. நடராசரும் சிவகாமியும் கி.பி. 18-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவை. நடராசர் சபையின் எதிர்ப்புறம் இரு வரிசைகளில் 14 தூண்கள் செங்கல்லும் காரையும் கொண்டு கட்டப் பட்டு மராட்டியர் கலைப்பணியில் விளங்குகின்றன. இத்தூண்களை இணைக்கும் வகையில் மேற்புறம் வளைவுகளும் அதன் மேல் உத்தரங்களும் காட்டப்பட்டுள்ளன. உத்தரங்களின் மேல் உள்ள விதானம் வண்டிக்கூரை வடிவில் உட்குவிந்து காட்சியளிக்கிறது.

## ஸ்ரீகோடீசுவரர் கோயில் — கொட்டையூர்

இக்கோயில் குடந்தையின் புறநகரில் காவிரி நதிக்கு வடபால் சுவாமி மலைக்குச் செல்லும் வழியில் அமைந்துள்ளது. இத்தலத்துக் குரிய சிறப்பு மரம் (ஸ்தல விருட்சம்) ஆமணக்குச் செடியாக இருந்த மையால் இவ்வூர் கொட்டையூர் என்ற பெயரைப் பெற்றுள்ளது. இங்கு உறையும் இறைவன் 'கோடீசுவரர்' என்றும், இறைவி 'பந்தாடு நாயகி' என்றும் திருப்பெயர் பெற்றுள்ளனர். அப்பர் சுவாமிகள் இவ்விறைவனைப் பாடிப் போற்றியுள்ளார். காவிரியில் திருவலஞ்சுழியில் இறங்கிய ஏரண்டமுனிவர் இங்கே வெளியே வந்த தாகக் கூறப்படுகிறது. இத்தலத்தில் ஏரண்ட முனிவர் யோக நிலையில் இருக்கும் சிலை ஒன்று வழிபாட்டில் உள்ளது. இப் பகுதியிலுள்ள தொன்மை வாய்ந்த ஆலயங்களில் இதுவும் ஒன்று. இக்கோயிலின் இராஜகோபுரம் ஐந்து நிலைகளோடு அமைந்து காட்சி தருகிறது. இவ்வாலயத்திலுள்ள நவக்கிரகங்கள் உரிய வாகனங்களின் மீது அமர்ந்த நிலையில் காட்சியளிக்கின்றன. இது இக்கோயிலின் தனிச்சிறப்புகளில் ஒன்று. இத்தலத்து இறைவனுக்கு

ஆண்டுதோறும் பங்குனி உத்திரத்தில் பிரம்மோற்சவம் நடைபெற்று வருகிறது. அப்பர் சுவாமிகள் தம் பத்துப் பதிகங்களில் இத்தலத்து இறைவனைக்

"கொட்டையூரில் கோடீச் சரத்துறையும் கோமான் தானே"

எனப் போற்றிப் பாடியுள்ளார்.

## ஸ்ரீ அமிர்தகலசநாதர் கோயில்

அரிசிலாற்றின் தென்கரையில் அமைந்துள்ள திருக்கலயநல்லூர் என்ற இத்தலம் இன்று சாக்கோட்டை என வழங்கப் பெறுகின்றது. சுந்தரர் பெருமானால் பாடப் பெற்ற தலம். ஒரு காலத்தில் இத்திருக்கோயில் வளம் பொருந்திய வயல்களுக்கிடையில் மண்டபமும், மாளிகையும் சூழ இருந்தது. இக்கோயிலைச் சுற்றிப் பெரிய கோட்டை இருந்ததால் இன்றும் மக்கள் இதனைக் கோட்டைச் சிவன் கோயில் என்று வழங்குகின்றனர். சுந்தரர் இதனை மண்டபமும், கோபுரமும், மாளிகை சூளிகையும் நிறைந்த ஊர் எனப் போற்றியுள்ளார்.

இத்தலம் குறித்து மூன்று வகையான புராண வரலாறுகள் கூறப்பெறுகின்றன. ஊழிக்காலத்தில் உயிர்களை அடக்கிய கலசம் இங்கு தங்கியதால் இது கலயநல்லூர் என்று வழங்கப்பெறுகின்றது என்றும், இங்கு பிரமன் இறைவனைப் பூசித்துப் பேறுபெற்றான் என்றும், இறைவன் உமையம்மையின் தவத்தினைக் கண்டு உவந்து அம்மைக்கு வரம் கொடுத்து மணம் புரிந்து கொண்டார் என்றும் கூறப்படுகின்றது.

## ஸ்ரீசாரங்கபாணி கோயில்

அதிட்டானம் முதல் கபோதம் வரை கருங்கல் திருப்பணியாலான, ஆழ்வார்களால் பாடப் பெற்ற இப்பழம் பெரும் கோயில் விஜயநகர, நாயக்கர் காலத்திய பல திருப்பணிகளைப் பெற்றுத் திகழ்கிறது. இத்தலத்தில் அம்மை கோமளவல்லியைத் திருமணம் செய்து கொள்ளச் சாரங்கபாணி வைகுண்டத்திலிருந்து தேரில் வந்த ஐதிகத்தை அடிப்படையாகக் கொண்டு, இக்கோயில் விமானம், தேரை ஒத்துக் கட்டப்பட்டதாகக் கூறுவர். திருமழிசை ஆழ்வார்

"நடந்த கால்கள் நொந்தவோ நடுங்க ஞாலமேனமாய்
இடந்த மெய் குலுங்கவோ விலங்குமால் வரைச் சுரம்
கடந்த கால் பரந்த காவேரிக்கரைக் குடந்தையுள்
கிடந்த வாறெழுந்திருந்து பேசு வாழிகேசனே"

என இவ்விறைவனைப் போற்றிப் பாடுகிறார்.

திருமாலின் திருவடியில் பூமிதேவியும், திருமுகத்தின் வலப்பாகம் ஸ்ரீதேவியும் அமர்ந்து வணங்கும் கோலத்தைக் காணலாம். திருமாலின் வலப்புறம் சப்தரிஷிகள்; நான்முகனின் அமர்ந்த கோலம், பக்கங்களில் அஞ்சலித்து நிற்கும் சூரியன், வானவர், கந்தர்வர், கின்னரர் ஆகியோரைக் காணலாம். இத்திருக்கோலத்தை நம்மாழ்வார் ஆராவமுதே எனத் தொடங்கித் 'திருக்குடந்தை ஏரார் கோலம் திகழக்கிடந்தாய் கண்டேனெம்மானே' எனப் புகழ்ந்து பாடியுள்ளார். இத்திருமேனியைப் பொய்கை, பூதம், பேய், நம்மாழ்வார் திருமழிசை, திருமங்கையாழ்வார், பெரியாழ்வார் ஆகிய எழுவரும் பாடியுள்ளனர். கருவறையின் முன்புறமுள்ள எளிய அர்த்த மண்டப வாயிலை இரு துவார பாலகர் சிற்பங்கள் காத்து நிற்கின்றன. கருவறை, அர்த்த மண்டபச் சுவர்களைப் பீடங்களில் குந்து சிம்மங்கள் கொண்ட வேலைப்பாடு மிக்க அரைத் தூண்கள் அலங்கரிக்கின்றன. அர்த்த மண்டபத்தின் முன்புறம் வேலைப்பாடு மிக்க 12 தூண்கள் அலங்கரிக்கும் திருமாமணி மண்டபம் அமைந்துள்ளது. இத்தூண்களில் ஒவ்வொரு அடுக்கும் சாலைகளும் கர்ண கூடுகளும் மாறி மாறி அமைந்துள்ளன. தூண்களின் இடையிடையே நாட்டியச் சிற்பங்கள் இடம் பெற்றுள்ளன. இம்மணி மண்டபத்தின் விதானத்தை விரிந்த தாமரை மலர்களும், அவற்றின் முதல் வட்டங்களில் அன்னப்பட்சிகளும், இரண்டாவது வட்டங்களில் குதூகலித்து நிற்கும் வானரக் கூட்டங்களும், மூன்றாவது வட்டங்களில் வரிசையாகச் செல்லும் யாளி கூட்டங்களைத் துரத்தும் வீரர்களும் இடம் பெற்றுள்ளனர். நான்காவது வட்டத்தில் இராமாயணச் சிற்பங்கள் பல இடம் பெற்றுள்ளன. இராமபிரான் 7 மராமரங்களை ஒரே அம்பால் துளையிடுவதும், இராமபிரான் முன்பு அனுமனும், சுக்கிரீவனும் வணங்கி நிற்பதும், வாலி சுக்கிரீவன் சண்டைக் காட்சியும், இராமன் வாலியைக் கொல்வதும் போன்ற இராமாயணக் காட்சிகள் இடம் பெற்றுள்ளன. இத்தூண்கள் கி.பி. 16-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவை. இம்மண்டபத்தின்

தென்மேற்கு, வடமேற்கு மூலைகளில் இவ்வாயில்கள் உள்ளன. இவை தட்சிணாயன, உத்தராயண வாயில்கள் எனப்படும். ஆடி 1 முதல் மார்கழி 30 வரை தட்சிணாயனத்திலும் தை 1 முதல் ஆனி 30 வரை உத்தராயணத்திலும் இவை மாறி மாறித் திறந்திருக்கும்.

திருமாமணி மண்டபத்தின் வெளிப்புற மாடத்தில் இராமன் சந்நிதி உள்ளது. இங்கு சிலையும் கணையும் ஏந்தி நிற்கும் இராம பிரான், அவரது வலப்புறத்தில் சீதாப்பிராட்டி, இடப்புறத்தில் அஞ்சலித்து நிற்கும் இளைய பெருமாள், அவரது திருவடியின் கீழ் பணிந்து நிற்கும் அனுமன் ஆகியோரைச் சிற்பவடிவில் காணலாம். திருச்சுற்றில் கண்ணாடி மாடம், அம்பாள் சந்நிதி, பாதாள சீனிவாசர் சந்நிதி, சேனை முதல்வர், கண்ணாடி மாளிகை சந்நிதி, ஸ்ரீதேவி, பூதேவி சமேதராக மேட்டு சீனிவாசர் சந்நிதி, படசீனிவாசர் சந்நிதியும் உள்ளன.

## கோமளவல்லி அம்மன் சந்நிதி

தாயார் கோமளவல்லி இரு கால்களையும் பத்மாசனத்தில் கொண்டு இரண்டு கைகளுடன் காட்சியளிக்கிறார். தாயாரின் முன் புறம் உற்சவத் திருமேனி காணப்படுகிறது. அர்த்த மண்டப வாயிலைத் துவாரபாலகர் சிற்பங்கள் அலங்கரிக்கின்றன. அர்த்த மண்டபத்தின் முன்புறம் மகா மண்டபம் கீழ் மேலாக நீண்டுள்ளது. இம்மண்டபத்தின் வடதிசையில் வேணுகோபாலர் சந்நிதியும், இராமன் சந்நிதியும், அதன் முன்புறம் ஊஞ்சல் மண்டபமும், அதனை அடுத்த நவநீதகிருஷ்ணன் சந்நிதியும் உள்ளன. இம் மண்டபத்தைச் சுற்றி இரண்டாம் திருச்சுற்று வாயிலும் திருமதிலும் எழுப்பப்பட்டுள்ளன. இராமர் சந்நிதி வடமேற்கு மூலையில் ஆண்டாள் சந்நிதி, நூற்றுக்கால் மண்டபம், வலப்புறம் தேசிகர் சந்நிதி ஆகியவையுள்ளன. முதல் திருச்சுற்றின் உள்வாயில் நாயுடு வாசல் என்றும், மண்டபத்தின் கீழ்ப்புறவாயில் மஞ்சக் கோபுர வாசல் என்றும் அழைக்கப்பெறுகிறது.

## ஸ்ரீசக்கரபாணி கோயில்

"தூய்மை யோகமாயினாய் துழாயலங்கல் மாலையாய்
ஆமையாகி யாழ்கடல் வாழ் தேவர் நின்

நாமதேய மின்னதென்ன சொல்லவல்ல மாகிலும்
சாமவேத கீதனாய் சக்கரபாணி யல்லயே

என்று திருமழிசையாழ்வாரால் போற்றப்பட்ட இக்கோயில் காவிரியின் தென் கரையில் உள்ளது. இச்சக்கரபாணி, ஸ்ரீசாரங்க பாணிப் பெருமாளுக்குத் தம்பி என்பது ஐதிகம்.

ஒரு காலத்தில் சூரியன் தானே ஒளிமிக்கவன் என்ற அகந்தை யோடு தனது ஒளியின் வேகத்தால் அனைவரையும் துன்புறுத்த, ஸ்ரீவிஷ்ணு சுதர்சனம் என்ற தன் சக்கரத்தோடு கோடானுகோடி சூரியர்களின் ஒளியோடு தோன்றி, சூரியனின் அகந்தையையும், வன்மையையும் ஒடுக்கவே சூரியன் தனது தவறை உணர்ந்து வணங்கியதாக வரலாறு. எனவே மகாவிஷ்ணு சக்கரத்தின் வடிவ மாக இங்கு எழுந்தருளியிருக்கிறார். இக்கோயிலின் கருவறை மிக உயரமான இடத்தில் அமைந்துள்ளது. இவ்விடத்தை அடைய தெற்கிலும் வடக்கிலும் உள்ள படிக்கட்டுகளில் ஏறி நுழைவு வாயிலை அடையலாம். இவ்வழிகளில் ஒன்று தட்சிணாயன காலங் களிலும், மற்றொன்று உத்தராயண காலங்களிலும் திறக்கப்பட் டிருக்கும். கருவறை தரை மட்டத்திலிருந்து ஏறக்குறைய 20 அடி உயரத்தில் அமைந்துள்ளது. கருவறை கீழ்த்திசை நோக்கியது. இங்குள்ள மூர்த்தி எண்கோணமான யந்திரத்திற்கு நடுவில் மூன்று திருக்கண்களுடனும், எட்டு ஆயுதக் கரங்களுடனும், சூரிய ஜோதி யின் வடிவாகக் காட்சி தருகிறார். இவர் ஸ்ரீசக்கரத்தாழ்வார், சுதர்சன ஆழ்வார் என்ற சிறப்புப் பெயர்களையும் கொண்டிருப்ப வர். விஜயவல்லித் தாயார் என்ற பெயரோடு அருகில் மகாலட்சுமி காட்சி தருகிறார். இவர் மேற்கைகளில் தாமரை மலர்களை ஏந்தி கீழ்க் கைகளால் அபயவரதமளித்து அமர்ந்த கோலத்தில் அருள் பாலிக்கிறார். சக்கரபாணி அமைந்துள்ள கருவறையின் வலச் சுவரில் இரண்டு கைகளுடன் அஞ்சலித்து நின்ற கோலத்தில் அக்னி சூரியன் ஆகியோரும், இடச் சுவரில் நான்முகனும் அஞ்சலித்த கோலத்தில் காட்டப்பட்டுள்ளனர். இக்கோயிற் கருவறை, உபானம் முதல் பிரஸ்தரம் வரை கருங்கல்லாலும், ஏனைய விமானப் பகுதி செங்கல்லும் சுதையும் கொண்டும் எழுப்பப்பட்டுள்ளது. ஒரு தள விமானத்தை உடைய இக்கோயிலின் சிகரமும் கிரீவமும் வட்ட வடிவுடையன. கருவறையின் புறக்கோட்டங்களில் தெற்கிலும் மேற்கிலும் இலட்சுமிநரசிம்மரின் அமர்ந்த கோலமும், வடக்குக்

கோட்டத்தில் திருமகளும், நிலமகளும் சூழ வைகுந்த நாதரின் வீற்றிருக்கும் கோலமும் வடிக்கப்பட்டுள்ளன. கருவறை முன் அர்த்த மண்டபமும், மகாமண்டபமும் உள்ளன. மகா மண்டபத்தை இரு வரிசைகளில் வேலைப்பாடு மிக்க எட்டு தூண்கள் அலங்கரிக்கின்றன. இத்தூண்கள் சாலைகளும், கர்ணக் கூடுகளும், இடையிடையே, நாட்டியச் சிற்பங்களுமாக அடுக்கடுக்காக அமைந்து காட்சியளிக்கின்றன. இக்கோயிலும் வேலைப்பாடு மிக்க இத்தூண்களும் பிற்காலச் சோழர் காலத்தவை. முகமண்டபத்தில் கீழ்த்திசை மாடத்தில் கருவறையை நோக்கிய வண்ணம் கருடாழ்வாரின் சிற்ப உருவம் வணங்கிய நிலையில் உள்ளது. இதன் அருகில் தஞ்சையை ஆண்ட சரபோசி மன்னரும் அவரது பட்டத்து அரசியும் வெண்கலச் சிலையாக இறைவனை நோக்கி அஞ்சலித்த வண்ணம் காட்சியளிக்கின்றனர். இவ்வுருவங்கள் கி.பி. 18-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த மராட்டிய வார்ப்புக் கலைக்கு எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது.

## விஜயவல்லித் தாயார் சந்நிதி

திருச்சுற்றின் வடப்புறம் விஜயவல்லித் தாயாரின் சந்நிதி உள்ளது. கீழ்த்திசை நோக்கிய இச்சந்நிதி கருவறை, அர்த்த மண்டபம், மகாமண்டபம், முகமண்டபம் ஆகிய பகுதிகளைக் கொண்டது. அர்த்த மண்டப வாயில் மாடங்களில் இலட்சுமி நாராயணரின் இரு சிற்பங்கள் உள்ளன. மகாமண்டபத்தின் முன்புறம் உள்ள முக மண்டபத்தை 16 கற்றூண்கள் அலங்கரிக்கின்றன திருச்சுற்றின் கீழ் வாயிலில் முன்புறம் முகப்பு மண்டபம் உள்ளது. இம்மண்டபத்தின் வடதிசையில் ஆழ்வார் சந்நிதி, அனுமன் சந்நதி, தேசிகர் சந்நிதி ஆகியவை அமைந்துள்ளன. முகப்பு மண்டபத்தின் கீழ்த்திசையில் உள்ள இராசகோபுரம் ஐந்து நிலைகளுடன் காட்சி அளிக்கிறது.

## ஸ்ரீஇராமசாமி கோயில்

குடந்தைப் பெரிய கடைத்தெருவில் தென் கோடியில் அமைந்துள்ளது. வடதிசை நோக்கியுள்ள இராச கோபுரத்தோடு காணப்படும் பேராலயம் இது. கோயிலுக்கு உள்ளே நுழைந்தவுடன் தெரியும் நீண்டு விரிந்த மண்டபத்தில் சுமார் நான்கு மீட்டர் உயரமுடைய கல்தூண்களும், சித்திரத்தூண்களும், இவற்றில் அமைந்திருக்கும் தெய்வச் சிலைகளின் வடிவங்களும், பாயும்யாளி, குதிரை

களின் தோற்றங்களும் காண்போரைச் சிலையாக நிறுத்தி விடக் கூடியவை. இம்மண்டபத்தின் உள்ளே நுழைந்தவுடன் எதிரும் புதிருமாக உள்ள துவார பாலகர்களின் அச்சுறுத்தும் வடிவங்கள் நம்மை வியக்க வைக்கும். இதற்கு மேற்குப் புறத்திலுள்ள தூண் களில் வனப்பு மிக்க மங்கையர் கோலங்களும், கொடிப் பெண்களும், கூப்பியக் கரங்களோடு தோன்றும் அனுமனும், அங்கதன் போன்ற வடிவங்களும், வாலி, சுக்கிரீவன் சண்டைக் காட்சியும் நம் கருத்தைக் கவருகின்றன. மூன்றாவது வரிசையில் வணங்கும் கோலமாகத் தஞ்சை மன்னரான ரகுநாத நாயக்கர், தம் பட்டத்தரசியோடும், மகளோடும் காட்சியளிக்கிறார். இவரது எதிர்ப்புறம் பட்டத் தரசிகள் இருவரையும் மெல்லிய ஆடையும், எண்ணிறந்த அணிகளும் அணிந்து வணங்கி நிற்கும் கோலத்தில் காணலாம். இக்கோயிலை எடுப்பித்த நாயக்க மன்னர் இவரே. கொடி மரத்தின் கிழக்கே உள்ள கல்தூண் இராம கதையின் முக்கிய கதாபாத்திரங்களைத் தாங்கி நிற்கிறது. சதுர வடிவுடைய இத்தூணின் ஒரு புறம் கணையும் சிலையும் ஏந்தி நிற்கும் கோதண்டராமன்; அதனை யடுத்து மிதிலைச் செல்வி சீதாப்பிராட்டி, வலக்கையில் நீண்ட வாளோடும், இடக்கையில் சுவடியோடும் இராமர் சந்நிதி நோக்கி நிற்கும் அனுமன், நான்காவது பக்கத்தில் அம்பையும் வில்லையும் ஏந்தி நிற்கும் இளையபெருமானின் எழிற்கோலம் ஆகிய அனைத்தும் கல்லிலே செதுக்கப்பட்ட காவியங்கள் ஆகும். கீழ்ப்புறத் தூண் ஒன்றில் கல்லாயிருந்த அகலிகை இராமபிரான் திருவடிபட்டு உயிர்த் தெழுந்து அஞ்சலிக்கும் காட்சி இடம் பெறுகிறது.

இம்மண்டபத்திலிருந்து மகா மண்டபத்தையும், அர்த்த மண்ட பத்தையும் கடந்து கருவறையை அடைவோமானால் ஸ்ரீ இராம பிரானின் பட்டாபிஷேகக் காட்சியைக் கண்டு களிக்கலாம். இராமபிரானின் வலப்புறம் இலக்குவன் வில்லைத் தோளில் தாங்கி வணங்கி நிற்க, பரதன் வெண்குடை பிடிக்க, சத்ருக்கனன் சாமரை வீசி நிற்கும் காட்சியும் வலப்புறம் சொல்லின் செல்வனான அனுமன் கையில் இராமாயணச் சுவடி ஏந்தி, இராம மகிமைகளைக் கான மழையாகப் பொழிந்து கொண்டிருக்கும் அற்புதக் காட்சியும் அமைகிறது. மூலவருக்கு முன்புறம் அயோத்தி அண்ணல் இராமனும், சீதாப்பிராட்டியும், இளைய பெருமாளும், அனுமனும் செப்பு வடிவிலே காணப்படுகின்றனர்.

# மடங்கள்

## ஸ்ரீசங்கர மடம்

நகேசுவரன் கோயிலுக்கு வடக்கே டபீர் அக்ரஹாரத்தில் இம் மடம் உள்ளது. தஞ்சை மராட்டிய மன்னன் பிரதாப சிங்கன் அழைப்பின் பேரில் வந்து குடந்தையில் தங்கிய மகாதேவேந்திர சரசுவதி சுவாமிகளுக்காக இம்மடம் கட்டப்பட்டது. ஸ்ரீகாமகோடி பீடத்தின் 62-வது பட்டத்தைப் பெற்றிருந்த நான்காம் ஸ்ரீசந்திரசேகரேந்திரஸரஸ்வதி ஸ்வாமிகளும் (1746-1783), அவர்களுக்குப் பின் 63, 64-ஆம் பட்டத்திலிருந்த பெரியவர்களும் குடந்தையில் சித்தி அடைந்தவர்கள். இவர்களது அதிட்டானங்களை இன்றும் ஸ்ரீமடத்தின் பின்புறத்தில் காணலாம். ஆசார்யார்களின் தனிப்பூசனைக்காக இங்கு சந்திரமௌலீசுவரர் கோயில் இரண்டாம் சரபோசி மன்னரால் கட்டப்பட்டு கி.பி. 1822-ஆம் ஆண்டில் குடமுழுக்கு செய்யப்பட்டது. கி.பி. 1801-இல் (இரண்டாம் சரபோஜி காலத்தில்) கும்பகோணத்தில் நான்காம் மகாதேவேந்திரசுவாமிக்கு கனகாபிஷேகம் நடைபெற்றபோது, கனகாபிடேகத்துக்காக 500 சக்கரம் வழங்கப்பட்டுள்ளது. கி.பி. 1814 முதல் கி.பி. 1851 வரையில் கும்பகோணம் சங்கர மடத்தில் பீடாதிபதியாக இருந்த ஐந்தாம் சந்திரசேகரேந்திர சரசுவதி அவர்களுக்கு, இரண்டாம் சிவாஜி, 1833, 1842, 1850 ஆகிய ஆண்டுகளில் கனகாபிடேகம் செய்திருக்கிறார்.

## பெரிய மடம்

மகாமகக் குளத்தின் வடகரையிலுள்ள இவ்வீரசைவ மடமே ஒட்டக்கூத்தர் குறிப்பிடும் 'பெரிய மடம்' என்பது அறிஞர் கருத்து

''குடந்தையம் பதியில் கோதிலாப் பெரிய
மடந்தனில் வாழ்வீர மயேச்சுரர் வாழியே''

என்று இம்மடத்தின் சைவத்துறவிகளான வீரமாகேசுவரரை ஒட்டக்கூத்தர் வாழ்த்திப் பாடியிருப்பதால் கி.பி. 12-ஆம் நூற்றாண்டிலிருந்தே இம்மடம் சிறப்புடன் விளங்கி வருகிறது என்பது தெளிவாகிறது. தஞ்சையை ஆண்ட நாயக்க மன்னன் இரகுநாத நாயக்கரின் ஆட்சிக் காலத்தில் பெரிய மடத்தின் கர்த்தராக சாரங்க சுவாமிகள் என்பவர் இருந்திருக்கிறார்கள். இக்காலக்

கட்டத்தில் மன்னரின் பிரதானியாக இருந்த கோவிந்த தீட்சதரால் அனந்த கல்யாண மகாமண்டபமும் ஆசாரவாசலும் கட்டப்பட்டது என்ற செய்தியினைக் கல்வெட்டு ஒன்று தெரிவிக்கிறது.

## இஷ்டகா மடம்

கி.பி. 15-ம் நூற்றாண்டில் கும்பகோணத்தில் இஷ்டகாமடம் என்ற பெயரில் ஒரு மடம் இருந்திருக்கிறது. இம்மடத்தைச் சேர்ந்த புருஷோத்தம பாரதி என்பவர் கூத்தனூரில் எழுந்தருளியிருக்கும் சரசுவதி தேவிக்குக் கொடையளித்துள்ள செய்தி கூத்தனூர் அம்மன் கோயிலிலுள்ள தனிக் கல்வெட்டொன்றில் காணப்படுகிறது.

## அகோபில மடம்

அகோபில மடத்தினை, தமிழ்நாட்டில் ஆழ்வார் திருநகரில் அவதரித்த வண்சடகோபர், ஆந்திர நாட்டில் தோற்றுவித்தார். இம்மடத்தின் கிளை கும்பகோணத்தில் நரசிம்மபுரம் என்ற இடத்தில் உள்ளது.

## நாகபாசத்தார் தரும மடம்

தஞ்சை மராட்டிய மன்னர் துக்கோசியின் ஆட்சிக் காலத்தில் இந்த மடம் நாகேசுவரர் கோயில் வடக்குவீதி தென்சிறகில், மருளய மடத்திற்குக் கிழக்கில் அமைக்கப்பட்டிருந்தது. கும்பகோணத்தில் சிவாலயம், பெருமாள் கோயில் ஆகிய இரண்டு கோயில் நாகபாசத்தாரும் சேர்ந்து, தஞ்சாவூர் திருச்சிராப்பள்ளிப் பகுதியினைச் சேர்ந்த நாகபாசத்தார் அனைவரையும் அழைத்து இம்மடத்தினை அமைத்திருக்கின்றனர். இவையன்றி வேறு பல மடங்களும் குடந்தையில் உள்ளன. ★

---

## கும்பகோணத்தின் சிறப்பு

மற்ற இடங்களில் செய்த பாபம் புண்ய தலங்களில் அகலும்
புண்ய தலங்களில் செய்த பாபம் வாரணாசியில் அகலும்
வாரணாசியில் செய்த பாபம் கும்பகோணத்தில் அகலும்
கும்பகோணத்தில் செய்த பாபம் கும்பகோணத்திலேயே அகலும்

என்று ஒரு சமஸ்கிருத ஸ்லோகம் கூறுகிறது.

---

NADU STATE DEPARTMENT OF ARCHAEOLOGY.
MADRAS.
LIBRARY.